3 - 7 சுறவம் : திபி. 2031 (சன, பிப் 2000) விலை : உரு. 5.00

www.padippakam.com

உழைக்கும்

# மக்கள் தமிழகம்




படிப்பகம்

தமிழக அரசியல் பண்பாட்டு விடுதலை மாத இதழ்

www.padippakam.com

# சுட்டுக் கொல்லலாம்!

"போலீசாருடன் நேரடி மோதல் ரவுடி சுட்டுக் கொலை"

"போலீசாருடன் மோதல் ரவுடி படுகொலை"

திருநெல்வேலியில் கடந்த சனவரி 17 அன்று முத்துராசு என்பவர் போலீசால் சுட்டுக் கொல்லப்பட்டபோது நாளிதழ்கள் வெளியிட்ட செய்திகளின் தலைப்பு தான் மேலே கண்டவை. ஆனால் நடந்தவை வேறு.

சனவரி 17 அதிகாலை 4.45க்கு பழவூரிலிருந்து நெல்லை செல்லும் நெடுஞ் சாலையில் சிறிய சரக்குந்து (மினிலாரி) ஒன்றில் முத்துராசன், மனோகரன், ராசன் ஆகியோர் சென்று கொண்டிருந்தபோது குமாரபுரம் சந்திப்பில் பழவூர் போலீசு உதவி ஆய்வாளர் முத்துக்கிருஷ்ணன் தலைமைப் போலீசு திருநாவுக்கரசு, சிவன், பென்சாம், செல்லப்பன் மற்றும் கள்ளச்சாராய வியாபாரி நயினார் நாகேந்திரன் (நயினார் தேவர் மகன்) சாராய ரவுடி அவரைக்குளம் பாண்டியநாடார் ஆகியோர் அந்த வண்டியை மடக்கிச் சோதனை செய்து, மனோகரன், இராசன் ஆகியோரை விரட்டி விட்டு முத்துராசை மட்டும் பிடித்துக் கொண்டனர்.

உடனடியாக பனகுடியை நோக்கிப் போலீசு வண்டியை கொண்டு சென்று, காவல் கிணறு சந்திப்பு வந்தவுடன் முத்துராசனை வண்டியிலிருந்து இறக்கி கருப்புத் துணியால் கண்களைக் கட்டி முப்பந்தல் அருகே செயமாதா பொறியியல் கல்லூரிக்குப் பின்புறம் அமைந்துள்ள தரைப்படை பயிற்சி இடத்திற்குக் கொண்டு சென்று கை, கால்களை முறித்துள்ளனர்.

பின் இருகைகளின் நரம்புகளை அறுத்து இரத்தத்தை ஒரு பாத்திரத்தில் பிடித்து வைத்துவிட்டு மண்டையின் சிறுமூளைப் பகுதியை அடித்து உடைத்துள்ளனர். குற்றுயிராய்க் கிடந்த முத்துராசனை ஒரு உறையில் போட்டுக் கட்டி 7.00 மணி அளவில் பழவூர் போலீசு நிலையத்திற்கு கொண்டுவந்து போட்டுவிட்டு போலீசு கண்காணிப்பாளருக்கு முத்துராசு இரு போலீசாரை வெட்டிவிட்டு ஓடுகிறார் என்ன செய்ய? என்று செய்தி கொடுக்க அவரும் சுடுங்கள் என்று சொல்ல, அதன் பின் குமாரபுரத்திலிருந்து 15 கி.மீ. தொலைவிலுள்ள பூலாத்தி பொத்தைமலையில் கொண்டு போய் போட்டுத் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். அவர் உடலில் 5 குண்டுகள் சுடப்பட்டுள்ளது. இதனைப் பாராட்டி அன்று மாலை பாண்டிய நாடார் போலீசுக்கு விருந்து கொடுத்துள்ளார்.

செய்தி : ராசரத்தினம்
நெல்லை மாவட்ட த.ஒ.வி.இ.

தருமபுரியில் உழவர்களோடு இணைந்து நின்று மக்கள் பணியாற்றிய நக்சல்பாரி இயக்கத் தோழர் ரவீந்திரனையும் கடந்த சனவரி 7 ஆம் நாள் கடத்திச் சென்று போலீசு மூன்று நாட் களாய் அவரைத் துன்புறுத்திக் கை, கால்களை ஒடித்து கண்ணைக் கட்டிச் சுட்டுக் கொலை செய்துவிட்டு செய்தித் தாள்களுக்கு அறிக்கை தருகிறது. நக்சலைட் போலீசை நோக்கிச் சுட்டுக்கொண்டே ஓடியபோது சுட்டுக் கொலை என்று

ஒரு துப்பாக்கி, தோள்பட்டையில் ஒன்றோ, அதற்கு மேலோ மின்னும் விண்மீன்கள், கருப்போ, காக்கியோ தொப்பிட ஒன்று, காக்கி உடை, திருப்பார்வை இவையிருந்தால் போதும் யாரையும் எதைச் சொல்லியும் விடுதலையாய்ச் சுட்டுக் கொல்லலாம். எதிரே இன்னொரு துப்பாக்கி நீளாதவரை.

www.padippakam.com

# சாதியை எரிக்கட்டும் போகித் தீ!

சாதி ஓர் உணர்வு சார்ந்ததாக மட்டுமில்லாமல், வாழ்க்கையைச் சார்ந்ததாகவும் இருக்கிறது.

வாழ்கிற இடங்களை வைத்துச் சாதி அடையாளப்படுவது போலவே, வாழ்கிற முறைகளைக் கொண்டும் சாதி அடையாளப்படுகிறது.

ஆதிக்கச் சாதி வெறித்தனங்கள் இத்தகைய ஒதுக்கல்களை மேலும் தனிமைப்படுத்துவதன் வழி தன் ஆதிக்கச் சாதியத் தன்மைகளை வலுப்படுத்திக் கொள்கிறது.

இந்திய அரசக் கட்டமைப்புக்கு இத்தகைய சாதியப் போக்குகள் முழுமையாய் ஆளுமைக்குத் துணையாய் இருப்பதால் இந்திய அரசம் ஆளுமைச் சாதியக் கட்டமைப்பு கொண்ட அரசாகவே இருக்கிறது.

ஒருபுறம் சமத்துவபுரம் எனறு வீடுகளை ஒருசேர கட்டிக்கொடுக்கிற முயற்சிகள் நடைபெற்றாலும், மறுபுறம் சாதி இறுகிக் கிடக்கிற வாழ்க்கை முறைகளை மாற்ற இந்த அரசு எந்த முயற்சிகளையும் செய்வதில்லை.

எந்த முயற்சியையும் செய்யாமல் போனாலும் போய் விட்டுப் போகிறது, ஆனால் அதுவே மக்களின் பல எழுச்சிப் போராட்டங்களைச் சாதியைத் தூண்டிவிட்டு பிரித்தலையும், நசுக்கவும் செய்கிறது.

அன்றைக்கு 1921இல் பி அண்ட் சி மில் தொழிலாளர் போராட்டத்தைச் சாதியைக் கொண்டு உடைத்தெறிந்தது போலவும், 1967இல் கீழ்வெண்மணி உழவர் எழுச்சியைச் சாதியைக் கொண்டு கொளுத்தி அழித்தது போலவும், இன்றைக்கு மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்களின் எழுச்சியைச் சாதியச் சிக்கலாக மாற்றிச் சாகடிக்கிறது.

இத்தகைய ஒடுக்குமுறைகளைச் சரியாக உணர்ந்து கொள்வதும், அதற்கு எதிராகச் சாதியக் கட்டமைப்பு உடைத்தழிப்பதும் நம் கடமையாகின்றது.

இந்திய அரசுக் கட்டமைப்பை – அது பாதுகாத்து வைத்திருக்கிற இச்சாதியக் கட்டமைப்பை எதிர்த்துப் போராடி வீழ்த்தாமல் இச்சமூக அமைப்பும் மாறப்போவதில்லை, சாதியும் ஒழியப்போவதில்லை.

இத்தகைய போக்கில் மக்களை அணிதிரட்டாமல், சமூக மாற்றத்திற்கான திட்டம் வகுக்காமல், தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சிகளைப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எதிரானதாய் மாற்றிச் சாதிய மோதல்களை உருவாக்குவதும், மோதல்கள் உருவானதன் வழிச் செல்வாக்கு பெற்று அரசக் கட்டமைப்பின் அடிவருடிக்கட்சிகளிடம் அடைக்கலம் புகுவதும் சாதி ஒழிப்புக்கானதாய் அமைந்துவிட முடியாது.

சாதிய அரசக் கட்டமைப்போடு சமரசம் பேசிக்கொண்டு தன் சாதியையும் அடையாளப் படுத்திக்கொள்ள முடியுமே தவிர, சாதியை வீழ்த்தமுடியாது.

மேலும், சாதியக் கட்டமைப்பை வீழ்த்துவது, அதற்காகப் போராடுவது என்பது அரசியல் சார்ந்தது மட்டுமன்று.


28

உழைக்கும்

மக்கள்

தமிழகம்



தொடர்புக்கு

*உழைக்கும் மக்கள் தமிழகம்,*

33, லசு சர்ச் சாலை,

மயிலார்ப்பூர், சென்னை - 4.

✆ 4671193



இதழ் குழு

பொழிலன்

இளங்கோவன்

செல்வி

செந்தழல்

மார்க்சுவேனில்


படிப்பகம்

www.padippakam.com



அது, பொருளியல் சார்ந்தது. பொருளியல் வழியும் இச்சமூகக் கட்டமைப்பை உடைத்தெறிந்து சமன்மைப் பொருளியல் அமைப்புக்கு வழி அமைப்பது.

அதுபோலவே வரலாற்றைச் சார்ந்தது, கலை இலக்கியங்களை, மொழியை பிற அனைத்து கூறுகளுடன் ஆண்டைகளின் கூறுகளாக இருப்பதிலிருந்து உழைக்கும் அடித்தள மக்களுக்கானதாய் விடுதலை செய்வது.

அதுபோலவே அது பண்பாட்டையும் சார்ந்து, வல்லரசிய இந்தியப் பார்ப்பனிய – சாதியக் கட்டமைப்பின் பண்பாட்டு வடிவங்களை மக்கள் வாழ்வியலிலிருந்து துடைத்தெறிந்து தமிழ்த்தேசிய உழைக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் பண்பாட்டை உயர்த்திப்பிடிப்பது.

எனவே, அரசியல் அளவில் மட்டுமல்லாமல் பிற கூறுகளின் வழியாகவும் நாம் ஆளுமைச் சாதியக் கட்டமைப்பின் போக்குகளை எதிர்த்தும், உழைத்தும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியலை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டியிருக்கிறது.

சாதிய ஒழிப்புக் கருத்தியலின் எரிதழல்களைப் பண்பாட்டுத் தளங்களிலும் பற்றவைக்க வேண்டியிருக்கிறது. அப்போதுதான் அத்தழல்களின் நாக்குகள் இண்டு இடுக்குகளில், சந்து பொந்துகளில் சாதி அழுக்குகளைத் துடைத்தெறிகிற முயற்சியை மேற்கொள்ளமுடியும்.

இல்லையெனில், ஒரு பக்கம் சாதி ஒழிப்பு பேசிக்கொண்டே, மறுபக்கம் சாதிய விழாக்களைக் கொண்டாடுவதும், பார்ப்பனியப் பண்பாட்டை எதிர்த்துக் கொண்டே அதன் பண்பாட்டுக் கூறில் முடங்கி விடுவதாகவே நம் வாழ்வியல் போக்கு அமைந்துவிடும்.

எனவேதான், சாதி ஒழிப்புக் கருத்தையும், பண்பாட்டுத் தளங்களில் விரிவுபடுத்துகிற முயற்சியாய் சாதிக் கொடூரன் எரிப்பு விழாவை த.ஒ.வி.இ. முன்னெடுத்து நடத்திவருகிறது.

இந்தியப் பாப்பனியக் கட்டமைப்பு நரகாசூரன் என்கிற பார்ப்பன எதிர்ப்பாளனின் வீழ்ச்சியை விழா எடுத்துத் தீபாவளி ஆக்குவதையும், இராவண லீலா என்று பார்ப்பன எதிர்ப்பு அரசனை எரிக்கிற காட்சியை விழாவாக்கி குடுமி முடிந்து கொள்ளுகிறபோது – அப்பார்ப்பணியக் கட்டமைப்பின் சாதிய வேரை கொளுத்துவதான பண்பாட்டு எழுச்சியே இச்சாதிக் கொடூரன் எரிப்புத் திருவிழா.

இதை 1996ஆம் ஆண்டு அறிவித்துத் தொடங்குகையில் எளிதே அரசு அனுமதித்திடவில்லை. இப்போதும் அனுமதிக்கவில்லை.

இருப்பினும் தடைமீறி அன்று 1996இல் அரக்கோணத்தில் சாதிக் கொடூரனுக்குத் தீ வைத்துத் திருவிழாக் கொண்டாடப்பட்டதிலிருந்து, நான்கு ஆண்டுகளாய்த் தொடர்ந்து இன்று 2000இலும் அத்தீ பற்றிப்பரவித் தமிழகமெங்கும் எரியத் தொடங்கியிருக்கிறது.

சென்னையில் எண்ணூர், பள்ளிக்கரணை, மேடவாக்கம், மயிலாப்பூர், குன்றத்தூர் என்றும், வேலூர் மாவட்டங்களில் பாராஞ்சி, அம்மனூர், கொடைக்கானல், கும்மிடிப்பூண்டி, வந்தவாசி போன்ற பகுதிகளிலும், ஈரோட்டு நகரத்தில் பெருமளவில் மையப்பகுதியும், தூத்துக்குடி, நெல்லை மாவட்டப்பகுதிகளிலும் இத்திரு விழாக்களில் சாதிக் கொடூரன் எரிக்கப்பட்டது.

இது ஏதோ, த.ஒ.வி.இ.யின் விழா என்றில்லாமல் தமிழ்த் தேசிய உழைக்கும் மக்களின், ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சி விழா என்கிற அளவில் மூட்டப்பெறுகிற தீயே பார்ப்பனப் பண்பாட்டை, பார்ப்பனியக் கட்டமைப்பை, ஆதிக்கச் சாதிய வெறித்தனத்தை வீழ்த்த எடுத்த பண்பாட்டு முயற்சியாய் அமையும்.

அத்தகைய தீ மூட்டங்களே – தமிழ்த் தேசியத் திருவிழாக்களாக முடியும்.

கொடுமையின் வலியோடு கொதிக்கும் நெஞ்சோடு

சாதிக்கு மூட்டிய போகித்தீப் பரவட்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# ஏன்? வீதிக்கு வீதி ஆங்கிலப் பள்ளிகள்!

என்றோ தொடங்கி, இன்று வலுவாக நடந்து கொண்டிருப்பது மூன்றாம் உலகப்போர். இதில் அடிவாங்குவன வளரும் நாடுகள். அதாவது ஏழை நாடுகள். அடிப்பவை வல்லரசுகள்.

இந்த அடிகள் நம் உடலின்மேல் விழுவன அல்ல. நம் உள்ளத்தின்மேல் விழுவன. நம் அறிவின் மேல் விழுவன. நமது மொழியின் மேல், பண்பாட்டின் மேல் விழுவன.

இந்த அடி விழவிழ, 'நமது' என்று சொல்லக்கூடிய ஒவ்வொன்றையும் நாம் இழந்து கொண்டிருக்கிறோம். நம் கண்முன்னே நம்முடையதெல்லாம் ஒவ்வொன்றாகப் பறிபோய்க் கொண்டுள்ளன.

நமது நிலம், நமது நீர், நம் மரங்கள், செடிகள், கொடிகள், காய்கனிகள் தவசங்கள், நமது இயற்கை அரண், நமது பண்பாடு, நமது இருப்பு, நமது மொழி எல்லாவற்றையும் நாம் இழந்து கொண்டிருக்கிறோம்.

நாம் இழந்து வருவதை நம் அண்ணனோ, தம்பியோ, உற்றார் உறவினரோ அறிந்து கொள்வது கடினமாக உள்ளது.

நம்மைச் சிரிக்கவைத்து, நம்மைக் கொண்டாட வைத்து, நம்மைக் குதூகலிக்க வைத்து, நமக்குப் புத்தாடைகளை அணிய வைத்து, நறுமணப் பொடிகளை நம்மீது பூசிவிட்டு, ஃபேர் அன் லவ்லி தடவிவிட்டு, பெப்சியும், கொக்கோ கோலாவும் குடிக்கவைத்து, நாம் கிறங்கி கிடக்கும்போதெல்லாம் நம்முடையன ஒவ்வொன்றாய்ப் பறிபோகின்றன.

இந்த வகைப் பட்டதுதான் நமது பண்பாடும், நமது பண்பாட்டை ஆரத் தழுவியுள்ள நமது மொழியும்.

உலகில் எத்தனையோ ஏழை இனங்கள் 'தமது' என்று சொல்லக்கூடிய எதை இழந்தபோதும் ஏமாற்றத்தோடே துவண்டு கிடந்துள்ளன. ஆனால், அவர்களின் மொழி என்னும் கட்டுமானம் தகர்க்கப்பட்டபோது சிறுத்தைகளாய்ச் சீறி எழுந்துள்ளன.

மொழி என்னும் கட்டுமானம் தகர்க்கப்படும்போதுகூட, துவண்டும் தூங்கியும் கிடப்பது தமிழர் சமூகம் மட்டுமே.

ஏன் தமிழினம் இப்படியாகி விட்டது?

தமிழகம் வல்லரசுகளின் கட்டுப்பாடற்ற வேட்டைக்காடு. வல்லரசுகளின் வாலரசாகிய பாரதீய சர்க்காருக்கும், அதன் நாவும் கண்களுமாய்த்திகழும் சனாதன அதர்ம இந்துத்துவக் கும்பலுக்கும், தமிழினம், கண்களும், செவிகளும் சிந்தையுமற்ற நல்லதோர் முரட்டு அடிமை.

இந்த முரட்டு அடிமை உண்மையைக் கண்டு கொள்ளாமல் இருக்கவும் உண்மையைக் கேட்காமல் இருக்கவும், உண்மையைச் சிந்திக்காமல் வாழவும் வேண்டுமானால், இது தன்மொழியைத் துறந்துவிடவேண்டும்.

இது தன்மொழியைத் துறந்தால் மட்டுமே பாரதீயனாய்ப் பரிணமிக்கமுடியும். அப்போது தான் பன்னாட்டு அடிமையாய்ப் பாடுபடமுடியும்.

தமிழினம் தன்மொழியை, இனஉணர்வை, பண்பாட்டு விழுமியத்தைக் கைக்கொண்டு விடுமானால் பன்னாட்டு அடிமைத்தளையை உடைத்து வீசும். பாரதீய மோசடியைக் காறி உமிழும்.

இந்த நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்பதால்தான் வட்டிக்கடைக்காரர்கள், கள்ள நோட்டுப் பேர்வழிகள், சமூகச் சுரண்டல் காரர்கள், குறுக்கு வழியில் பணம் திரட்டிய சமூகப் பகைவர்கள் எல்லோரும் ஆங்கில வழிப் பள்ளிகளை ஊருக்கு ஊர், வீதிக்கு வீதி தொடங்கியிருக்கிறார்கள்.

இந்த ஆங்கில வழிப்பள்ளி என்பது மிகக் கொடூரமான பண்பாட்டுப் போர்க் கருவியாகும்.

'குகி வா தியாங்கோ' என்ற உலகப் புகழ் பெற்ற கீன்ய தேசத்து எழுத்தாளர் கூறுகிறார்.

**'மக்களுக்குத் தங்கள் பெயர்களின் மீதும் தங்கள் பரம்பரையின் மீதும், மொழியின்**

படிப்பகம்

www.padippakam.com

மீதும், சூழ்நிலையின் மீதும், ஒற்றுமையின் மீதும், தங்கள் வலிமையின் மீதும் இறுதியில் தங்களின் மீதும், இருக்கின்ற பற்றினை, ஈடுபாட்டை, நம்பிக்கையைத் துடைத் தெறிவதுதான் இந்தப் பண்பாட்டுப் போர் கருவியின் நோக்கமாகும்.'

நம்மைத் தாக்கும் போர்க் கருவியை தமிழர்களாகிய நாம் அடையாளம் காண வேண்டாமா?

குகி, கூறுகிறார்.

'வரலாற்றில் மொழி என்பது மக்களின் ஒன்று திரண்ட பட்டறிவு, ஒன்றுபட்ட தன்னுணர்வு ஆகியவற்றின் சேமிப்புக் கிடங்கு' என்று.

ஒடுக்குமுறைக்கு ஆளான தமிழ் மக்களுக்கு அவர்தம் சொந்த மொழியை கல்வியிலும், பேச்சுவழக்கிலும் மறுப்பதன் மூலம், தமிழரின் ஒன்றுதிரண்ட பட்டறிவை, ஒன்றுபட்ட தன்னுணர்வை, அறிந்துணர்வின் சேமிப்புக் கிடங்கை உலகமயமாக்கும் சமூகப்பகைவர்கள் மறுக்கிறார்கள் – அப்புறப்படுத்துகிறார்கள் என்பது விளங்க வில்லையா? ஆண்டானின் மொழியை அடிமைக்குப் பழக்குவது எதன்பொருட்டு என்பது தெளிவாகவில்லையா?

சுகாட்லாந்தில் 'கெய்லிக்' மக்களின் கடைசி எழுச்சி 1746இல் ஒடுக்கப்பட்டது. சுகாட்லாந்தின் 1872 கல்விச்சட்டம் கெய்லிக்மொழி பேசுவதைத் தடை செய்தது. கவனக் குறைவாகப் பள்ளிகளில் கெய்லிக் மொழி பேசிய குழந்தைகளுக்குக் கடுமையான அடி உதைகள் தரப்பட்டன. லூய் தீவில் தாய்மொழி பேசியோர் விறகுக் கட்டுகளைச் சுமக்க வைக்கப்பட்டனர்.

1536ஆம் ஆண்டிலேயே 'வேல்சு' இங்கிலாந்துடன் இணைக்கப்பட்டது. வேல்சை அடக்கியாண்ட ஆங்கில முதலாளிகளுக்கு, வேல்சு மொழி சிக்கலை உண்டாக்கியது. எனவே, வேல்சு மொழியை வேல்சு நாட்டின் பள்ளிகளிலிருந்து அகற்றினர். விளையாடு களங்களில் கூட வேல்சு மொழியைக் குழந்தைகள் பேசக்கூடாது எனத் தடை விதித்தனர். பள்ளிகள் அனைத்தும் ஆங்கிலமயமாயின.

'கைப்பிடி அளவே உள்ள ஆங்கிலப் பள்ளிகளைக் கொண்டு, காவல்துறையை விட, படைஅமைப்பை விட, மிகத் திறமையாகவும், செலவில்லாமலும், வேல்சு மக்களை ஆங்கிலம் மட்டுமே பேசுகின்ற மக்களாக மாற்றமுடியும். ஆங்கில நாகரிகத்திற்குள், ஆங்கில பண்பாட் டிற்குள் அவர்களைக் கொண்டு வரமுடியும். பிரிட்டன் பொருளியல் நலத்திற்கு அவர்களை உறுதுணையாய்ச் செய்விக்கமுடியும்' என்று ஆங்கிலப் பாராளுமன்றத்திலேயே பேசினர். செயல்படுத்தினர். விளைவு, வேல்சு தன்னை இழந்து, தன் மொழியை, பண்பாட்டை இழந்தது. வேல்சு நாட்டுச் சுரங்கங்களும் கனவகைத் தொழில்களும் பிரிட்டிசுப் பொருளியலில் முதன்மைப் பங்குபெறத் தொடங்கின.

கேவத் என்ற எழுத்தாளர் கூறுகிறார் (குகியின் மேற்கோள் இது) **'மொழி ஒரு தற்காப்புப் படை. நம்மை நாம் இழக்காமல் இருப்பதற்கான அரண். அயலார் நம்மிடமிருந்து பிடுங்க முயலும் நம் அடித்தளம். மொழியே மக்களின் புகலிடம்'.**

ஆனால் தமிழர்களாகிய நாம், நம் தற்காப்புப் படையை, நம்மை நாம் இழக்காமல்

## வேட்டியில் படித்தது

**தி.மு.க. தனித்தமிழ் நாட்டைக் கைவிட்டுவிட்டது தமிழர்கள் தமிழைக் கைவிட வேண்டும்**

**- கருணாநிதி**

தமிழ்ப் புலவர்கள் கொஞ்சம் வேகமாகப் போகிறார்கள். மிக வேகமாகப்போக விரும்புகிறார்கள். எல்லாம் தமிழிலே இருக்கவேண்டும். தமிழைத் தவிர வேறு ஒன்றுமே இருக்கக்கூடாது. ஆங்கிலமே இங்கு நுழையக்கூடாது. ஆங்கிலத்தின் வாடையே வீசக்கூடாது என்று சொல்வதும் சரியல்ல.

அப்படி இருக்கவேண்டுமானால் தமிழ்நாட்டில் வேறு எந்த மொழியும் தலைகாட்டக்கூடாது, பேசக்கூடாது என்ற அளவிலே உத்தரவு போடவேண்டுமானால் அதற்குத் தனித்தமிழ்நாடு கிடைத்தால்தான் முடியும். தனித்தமிழ் நாட்டில்தான் அது நடக்கக்கூடும். நாம் தமிழ்நாடு தனிநாடு என்கிற பிரச்சனையை விட்டு ரொம்பகாலம் ஆயிற்று. எனவே, அதைப்பற்றி நாம் சிந்திப்பதாக இல்லை.

**18.12.99 அன்று நடந்த தி.மு.க. பொதுக்குழுவில் கருணாநிதி.**

படிப்பகம்

www.padippakam.com

இருப்பதற்கான அரணை, நம் அடித்தளத்தை, நம் மக்களின் புகலிடத்தை இழக்கத் துணிந்திருக்கிறோம்.

ஆங்கிலப் பள்ளியின் நோக்கமென்ன?

அய்ரோப்பிய முறையில், ஒரு புதுவகை மேட்டுக் குடியினரைத் திட்டமிட்டு உருவாக்குவதுதான். தான் யாரென்றோ, தன் நிலத்தின், இனத்தின், மொழியின் பரம்பரை செழுமை இன்னதென்றோ தெரியாத குருட்டு அடிமை ஊழியரை உருவாக்குவதுதான்.

'அயலவரின் மொழி, மக்களை அடிமைப்படுத்தி வைக்கவே பயன்படும். நம் சொந்தத் தோற்றத்தை வடிவமைத்துக் கொள்ள நமது சொந்த மொழியே பயன்தரவல்லது. இது ஆப்பிரிக்க எழுத்தாளர்களின் பறைமுழக்கம்.

மக்களுக்கு முன்னேற்றம் தராத வளர்ச்சியைக் கொண்டு வருவதற்காக ஆங்கிலத்தைத் தூக்கி கொண்டு பலர் புறப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் மனிதச் சமன்மை, மனித நீதி, சமூக அமைதி, மக்கள் முன்னேற்றம் இவற்றை விரும்புவோர், உலகம் முழுதும் தாய்மொழி மூலம் கற்பதையே விரும்புகிறார்கள்.

இன்று நாம், தமிழை வேரறுக்கப் புறப்பட்டிருக்கும் ஆங்கிலக் கனக விசயர்களை எதிர்த்துக் கிளம்பியிருக்கிறோம். சோ ராமசாமி சாணக்கியர்களும், சங்கரமடத்து மனுதருமப் புரோகிதர்களும் நமக்குப் பில்லி சூனியம் வைக்கத் தொடங்கி விட்டார்கள. நம் சேர, சோழ, பாண்டிய மாமன்னர்கள் சென்னைப் பட்டினத்துச் சிம்மாசனத்தில் குந்திக்கொண்டு குளிரால் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். நாம் இவர்களின் குளிரைப் போக்கியாக வேண்டும். பில்லி சூனியப் பொய்ம்மைகளை எற்றி உதைத்தாக வேண்டும். தமிழ்க்கல்வி என்னும் சிலையைக் கனக விசயர்களின் தலையில் ஏற்றியாக வேண்டும்.

பணத்திற்காக ஆங்கிலப் பாறாங் கல்லைச் சுமப்பவர்கள் பணம் கொட்டு மென்றால் தமிழ் என்னும் சிலையையும் தயக்கமின்றிச் சுமப்பார்கள்.

தஞ்சையிலிருந்து மெட்ரிக்பள்ளி தமிழ்வழிக் கல்விக்கு ஆதரவாக அறிக்கை விட்டுள்ளது.ஒவ்வொன்றாய் இனி ஆதரவு நிலை எடுப்பது நம் தளரா முயற்சியில் உள்ளது.

நாம் திண்ணியராவோம். பின்பு நாம் எண்ணிய எண்ணியாங்கு முடியும்.

## உங்கள் நினைவில் நிற்க!

தாத்தா . . . . தாத்தா
செய்தித்தாள் படிச்சீங்களா . . . .?

நான்
நிரம்பப் படிப்பவனென்று
தெரியாதா உனக்கு.

ஊரறிய
ஊர்வலம் போனோம் . . . .
தாள்களில்
படமும் செய்தியும் பார்த்தீங்களா . . .?

அடடே . . . . அப்படியோ . . . .
பார்க்கலையே . . . .
எத்தனையோ வேலை . . .
என்ன செயய நான்.

போங்க தாத்தா . . .
பொல்லாத வேலை.

ஏய் . . . சுட்டி . . .
எதற்காக ஊர்வலம்
அய்யப்பன் கோவிலுக்கு
விளக்கு ஊர்வலமா . . .?

அய்யோ . . . தாத்தா . . .
இப்படியா இருப்பீங்க . . .
ஊர்லெ,
எங்கோ இருமுவதை
எவனென்று கேக்குற நீங்க . . .
ஓங்கி முழக்கமிட்ட
எங்களின்
ஊர்வலம் அறியலையா?

"அறிவுக்குத் தமிழிருக்க
ஆங்கிலம் எதற்கு . . .?"
"தாய்ப்பால் குடிக்க விடு"
"தமிழிலேயே கல்வி கொடு"

இப்படி . . .
ஏந்திய அட்டைகளும்
ஓங்கிய முழக்கங்களும்
ஊரே அறிந்தது . . .
உங்களுக்குத் தெரியலையா . . .?

போங்க . . . தாத்தா . . .
நாங்களென்ன . . .
தூங்கியா . . .?
உங்க நினைவில் நிற்க.

– உஞ்சைராசன்.

படிப்பகம்

www.padippakam.com

# சமச்சீரற்ற இந்தியாவில்
# சமச்சீரான வரிப்பிடுங்கல்கள்...

எதிலுமே சமச்சீரான வாழ்க்கை இந்தியாவில் இல்லை என்பது அனைவரும் அறிந்ததே.
இந்தியாவில் ஆயிரம் மொழிகள் இருக்கலாம்.
ஆனால் சமஸ்கிருதம் தான் தேவையாம்,
இந்தி தான் ஆட்சி மொழியாம்.
இந்தியாவில் பல்வேறு தேசங்கள் இருக்கலாம். ஆனால்
பார்ப்பனியத்துக்கானது இந்தியா அதனால் இந்தியா தான் தேசமாம்.
இந்தியாவில் பல மதங்கள் இருக்கலாம்.
ஆனால் பார்ப்பன இந்து மதம் தான் இந்திய மதமாம்.
இந்தியாவில் பலர் கடவுளை வழிபடலாம்,
ஆனால் கோயில் கருவறை சென்று வழிபாடு செய்கிறவன் பார்ப்பான் மட்டுமே. அவன் ஓதுகிற மொழி சமஸ்கிருதம் மட்டுமே.
ஆக..

சமச்சீரில்லாத நிலம்,
சமச்சீரில்லாத வாழ்க்கை,
சமச்சீரில்லாத சமூகம்,
சமச்சீரில்லாத பண்பாடு,
சமச்சீரில்லாத அரசியல்,
சமச்சீரில்லாத பொருளாதாரம்

இவைகளுக்கிடையில் மக்கள் உரிமைகள் அனைத்தும் மறுக்கப்படுவதில் மட்டும் சமச்சீர் தேவையாம்.

தமிழகத்திற் கென்று தனிக் கல்வித் திட்டம் கூடாது என்று இந்தியப் பார்ப்பனியம் பிடுங்கிக் கொண்டது.

தமிழகத்தில் கிடைக்கிற பெட்ரோல் தமிழகத்திற்கு இல்லை என்று இந்தியா கொள்ளையடிக்கிறது.

தமிழகத்தின் கால்வாய்கள், உழைப்பு, விளைச்சல் பொருள்கள் எல்லாம் இந்தியக் கொள்ளையனுக்காக அல்லவா போய்க் கொண்டிருக்கிறது.

இருக்கிற பண்டசட்டிப் பாத்திரங்களையும் இந்திய மார்வாடிகள்தானே வட்டிக்கடையின் பேரால் பிடுங்கிக் கொள்கிறான்.

இந்த நிலையில் இன்றைக்கு சமச்சீரான வரி விதிப்பு என்கிற பெயரில் தமிழகத்தின் விற்பனை வரி வருவாயையும் இந்தியாதான் தீர்மானிக்கிறது.

தமிழகத்தின் உரிமைகள் யாவும் பிடுங்கப்படுகிற இந்திய வெறிக்கட்டமைப்புக்குள் இன்னும் எவ்வளவு காலம் முடங்கிக் கிடந்து சிந்திப்பது.!

***மெட்ரிக் பள்ளிகளில் தமிழ்பயிற்று மொழி தவறானது - செயலலிதா***

நீயன்றி
யார் சொல்வார் இதனை!

உன்
பூவிதழில் உதிர்கின்ற
வெள்ளக்காரச் சொல் மெச்சி,
நீ கொள்ளையடித்த பணத்திற்கு,
பல்லக்குத் தூக்கி - உன்
பாதம் நக்கித்திரியும்
நாய்களும் தமிழரென்று
நாச்சுழற்றும் நாட்டில்
நீயின்றி
யார் சொல்வார் இதனை

நீ சொல்லாவிட்டால் தான் . . .
வியப்பு!

பெருமாள்

www.padippakam.com

# பார்ப்பனரும் ஐயமும்

பார்ப்பனர்கள் குறித்தும், பார்ப்பனியம் குறித்தும் நிறைய அறியப்பட்டிருந்தாலும், ஏராளமான நூல்கள் எழுதப்பட்டிருந்தாலும் இயக்கங்கள் பார்ப்பனர்களுக்கு எதிராகவும், பார்ப்பனியத்திற்கு எதிராகவும் கருத்தளவில் என்னவெல்லாம் வரையறுத்துக் கொண்டுள்ளன, அவற்றுக் கெதிரான திட் டங்களை என்னவெல்லாம் வைத்துக் கொண்டுள்ளன என்பது அடிப்படையானது. பார்ப்பனர்கள் என்போர் யார் என்பதும், பார்ப்பனியம் என்பது எது என்பதும் அடிப்படையில் நாம் விளங்கிக் கொள்ள வேணடிய செய்திகளாகும். அவ்வடிப்படை புரிதலே - நாம் அவற்றை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதை நமக்கு உணர்த்த முடியும். அவ்வகைப் புரிதலில் உள்ள குழப்பங்களே இன்றைக்குத் தமிழகத்தில் இயங்குகிற அமைப்புகள் பலவற்றின் செயற்பாடுகளிலும் வெளிப்படுகிறது. பார்ப்பனர்களையும், பார்ப்பனியத்தையும் கடுமையாகத் திறனாய்ந்தாலும், அவற்றைப் பற்றிய ஒரு வரையறுத்த அரசியலை அவை மேற்கொண்டிருக்கவில்லை. பார்ப்பனர்களின் கொட்டத்தைக் கடுமையாகச் சாடுகிற போக்குகள் அத்தகைய அமைப்புகளிடையே இருந்தாலும், அவற்றை நடைமுறைப் போக்குகளாகவே அவை மேற்கொண்டிருக்கின்றனவே அல்லாமல் கொள்கையளவில் அவை வரையறுத்துக் கொள்ளவில்லை.




பார்ப்பனியம் பார்ப்பனர்களுக்குள் அடக்கமா? பார்ப்பனர்களுக்குள் பார்ப்பனியம் அடக்கமா? என்பது ஆயப்படவில்லை. பார்ப்பனர்களைத் தங்கள் அமைப்புகளுக்குள் இணைக்கலாமா வேண்டாமா - என்பதற்கான ஆய்வு அமைப்பின் போக்கு வழி ஏற்கப்படுவதும் விலக்கப்படுவதுமாக இருக்கிறதே அல்லாமல் தெளிந்த வரையறைகளாக இருந்துவிடவில்லை. பொதுவாக ஒரு குலத்தையே ஆளுமைக் குரியதாகவும், குறைபாடுடையதாகவும், கூறி ஒதுக்கிவிடுவது அறிவியலுக்கே முரணானது என்ற காரணத்தாலே பார்ப்பனர்களைத் தங்கள் அமைப்பின் உறுப்பினர்களாக இணைத்துக் கொள்கிறோம் என்று அதற்கான காரணமாகக் குறிப்பிடுகின்றன, சில இயக்கங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

சில அமைப்புகள் பார்ப்பனர்கள்தாம் நம் எதிரிகளாக இருக்கிறபோது அவர்களை நம் அமைப்புகளில் எப்படி உறுப்பினர்களாக்குவது முறையானதாகும் – என்று கேள்வி எழுப்புகின்றன.

பார்ப்பனர்களுக்குள் சிலர் தங்கள் பாப்பன உணர்வை மறுத்துவிட்டுப் பூணூல்களை எல்லாம் கழட்டியெறிட்டுத்தான் வருகிறார்களே, அவர்களை ஏன் நாம் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளக்கூடாது – என்று நயன்மைப்படுத்திக் கேட்கின்றனர்.

இப்படியாகக் கருத்துகள் ஆழ்ந்த ஆய்வுக்குட்படுத்தப்படுதல் வேண்டும் என்பதற்காகவும், இவை குறித்து ஒரு தெளிந்த நிலைப்பாட்டுக்கு வரத்துணை செய்கிற வகையிலுமே இது எழுதப்பெறுகின்றது.

பார்ப்பனர் யார்?

பொதுவாக அரசியல் அளவில் இது ஏதோ சிறுபிள்ளைத் தனமான கேள்வி போல் தோன்றிடினும் இது தெரிந்து கொள்ளவேண்டிய பல செய்திகளை உள்ளடக்கியதே.

1916இல் தென்னிந்திய நல உரிமைச்சங்கம் எனும் பெயரில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோற்றம் கொண்டதிலிருந்து மட்டுமே பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதவர் என்கிற பகுப்புகள் எண்ணப்படவில்லை.

தொல்காப்பிய காலம் முதற்கொண்டே இத்தகு பகுப்புகள் இருந்ததை நாம் அறியமுடிகிறது.

பொதுவாகப் 'பார்ப்பனர்' என்போர் அன்று தமிழர்களுள் கால, நேரங்களைக் கணித்துச் சொல்வோரும், வானியல் அறிவு நிரம்பப் பெற்றோருமாகவே கருதப்பட்டனர்.

பிற்காலங்களில் தமிழிய நிலப் பகுதிகளுள் குடியேறிய ஆரியர்கள் தங்களையும் அச்சொல்லின் கீழ் அடையாளப் படுத்தினர்.



உயர்வு கருதி அழைக்கப்பெறும் சொற்களான பார்ப்பனர், அந்தணர் எனும் சொற்கள் யாவும் ஆரியர்களால் அவர்களைக் குறிப்பதற்கானவையாக மாற்றப்பெற்றன.

ஆயினும் பார்ப்பனர்கள் தங்களுக்குள் தங்களை 'பிராமணர்' – என்றே அடையாளப் படுத்திக்கொள்வதிலேயே பெருமைபட்டனர்.

வேத புராணங்கள் அடிப்படையிலும், மனுதர்மப்படியும் ஆரியர்கள் தங்களை பிராமணர்கள் என்றே அழைத்துக் கொண்டனர்.

"ப்ராஹ்ம ணோஸ்ய முகமாஸீத்
பாஹூ ராஜ்ண்ய க்ருத
ஊரூத தஸ்ய யத்வைஸ்ய
பத்வியாக்ம் ஸூத்ரே அஜாயத'

– என்று ரிக்வேதம் 8ஆம் கட்டளையில் புருஷ ஸூக்தம் என்பதில் சுட்டிக்காட்டியுள்ள படி பிரம்மனுடைய முகத்திலிருந்து பிறந்தவனே பிராமணன் என்பதாகத் தங்களை அவர்கள் உயர்வுபடுத்திக் கொண்டனர்.

பிரம்மனின் உடல் உறுப்புகளில் தூய்மையான பகுதியான முகத்திலிருந்து பிறந்தவனே பிராமணன் என்பதாக அவர்கள் அழைத்துக் கொண்டபடியே தான் வேதகால புராணங்களிலும், மனுதருமம் மற்றும் அவர்கள் சார்புடைய நூல்களிலெல்லாம் பதிவு செய்யப் பெற்றுள்ளது.

'மானியர் வில்லயம்சு' எழுதிய சமஸ்கிருத ஆங்கில அகராதியில்கூட, 'பிராமணர் என்போர் வருணப் பாகுபாட்டில் இருபிறப்புடையோரில் முதல் குடியினர்' என்றும், 'இன்றைய அளவில் பொதுவாக வேதங்கள் அறிந்தோரும் அதை ஓதுகிறவர்களுமான நிலையில் தூய்மையான அறிவுடையவராகவே பிராமணர்கள் அழைக்கப் பெறுகின்றனர்' – என்பதுமாகவே குறிப்பிடப் பெற்றுள்ளது.

ஆக, பார்ப்பனர்கள் தங்களைப் பிராமணர்கள் என்பதாகக்

www.padippakam.com

குறித்துக்கொண்டாலும், தமிழகத்திற்கு வந்து குடியேறிய பின்னர் – இங்குள்ள வழக்கங்களில் தம்மையொத்த வாழ்வியலைக் கொண்ட மேன்மையரின் பெயரிலேயே அறிமுகப்பட்டனர்.

பொதுவாக நம் நாட்டிற்கு வந்து வாழத் தொடங்கிய மேலை நாட்டினர் அடையாளப் பட்டது போலவே – குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் ஜி.யு.போப் அவர்கள் போப் ஐயர் – என அழைக்கப்பெற்றது போலும், அவர்களின் கிறித்துவ பைபிள் புத்தகம் வேதம் என்பதாகவும் அக்கிறித்துவக் கடைப்பிடிப்புகள், வேதஆகமம் – என்பதாகவும் பார்ப்பன வேதப்பெயரிலும், அதன் ஆகமப் பெயரிலும் குறிப்பிடப்படுதல் போலவே பிராமணர்களும் பார்ப்பனர்கள் என்றும் அந்தணர்கள் என்றுமாகவுமே அழைக்கப்பெற்றனர்.

பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றுள், தமிழ்ப் பார்ப்பனர்கள் பற்றிய குறிப்புகளே நிறைய உண்டு.

**'பாணன் கூத்தன் விறலி பரத்தை**
**யாணஞ் சான்ற வறிவர் கண்டோர்**
**பேணுதகு சிறப்பிற்** *பார்ப்பான்* **முதலா**
**முன்னுறக் கிளந்த கிளவியொடு தொகைஇத்**
**தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்'**

(தொல்-பொருள்)

என்பது உட்பட தொல்காப்பியத்திலும், புறநானூற்றிலும், திருக்குறளிலும் பல சான்றுகள் தமிழ்ப் பார்ப்பனரைக் குறிப்பதாகவே இருக்கின்றன.

இருப்பினும்,

**'எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து**
**சொல்லிய பள்ளி எழுதரு வளியின்**
**பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்**
**தகத்தெழு வளியிசை அரில்தப நாடி**
**அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே**
**அஃதிவண் நுவலா தெழுந்து புறத்திசைக்கும்**
**மெய்தரி வளியிசை அளவுநுவன் றிசினே!**

(தொல் - எழுத்து – 102)

எனத் தொல்காப்பியத்தில் தமிழ் எழுத்து ஒலிப்புமுறை குறித்துச் சொல்லுகையில் அது ஆரிய வேத ஒலிப்புமுறை போன்றதன்று என்று இணைத்துச் சொல்லுகிற இடத்தில் பார்ப்பனரை அந்தணர் என்றே சொல்லுகிறார் தொல்காப்பியர்.

அதே போல்,

**'மறப்பினும் ஒத்துக்கொளல் ஆகும்** *பார்ப்பான்*
**பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்'**

*(குறள் – 134)*



– என்று திருக்குறளில் பார்ப்பான் என்கிற படியாகவே குறிப்பிடப்பெற்றுள்ளது.

**'பார்ப்பனக் குறுமக . . .'** என்று ஐங்குறு நூறிலும்,

**'பார்ப்பனக் கோலம் . . .'** என்று சிலப்பதிகாரத்திலும்,

அதன்பின் இலக்கியங்களில் பல இடங்களிலும் பார்ப்பனன் ஆரியர் பார்ப்பனர்கள் சுட்டிச் சொல்லப் பெறுகின்றனர்.

ஆக, இவ்வகையில் தமிழர்தம் பழம் வரலாற்றில் நிமித்தம் பார்த்துச் சொல்லுகிற வானியல் அறிஞர்கள் பார்ப்பார் என்றது படிப்படியே மாறி இவர்கள் பார்ப்பனர் ஆயினர்.

ஆயினும் மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் பிராமணர்களைப் பிராமணர் என்றேதான் அழைக்கவேண்டும் என்பதாகவும், அல்லது அவர்களைப் பார்ப்பனர் என்று சொல்லுமிடத்து ஆரியப் பார்ப்பனர் – எனச் சுட்டல்வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார்.

'தமிழ் மறை நூல்களைப் பார்ப்பதும், வழிபாடு, திருமணம் முதலியவற்றை நடத்துவதுமே தொழிலாகக் கொண்டு, பார்ப்பனர் என்னும் பெயருடன் ஒரு குலத்தார் முன்னமேயிருந்து பின்பு ஆரியப்

படிப்பகம்

www.padippakam.com

பிராமணர் வந்தபின் தம் தொழிலையிழந்து விட்டனர். ஆரியப் பிராமணர் தமிழப் பார்ப்பாரின் தொழிலை மேற்கொண்டபின், தாமும் அவர் பெயராலேயே அழைக்கப்பட்டு வருதல் இயல்பானதே. அல்லாவிடின், வடமொழிப்பற்றுள்ள பிராமணருக்குப் பார்ப்பார் என்னும் தனித்தமிழ்ப் பெயர் வழங்கி வரக் காரணமில்லை'

– என்று ஒப்பியன் மொழி நூல் (பக்கம் . 30) பாவாணர் அவர்கள் விளக்கப்படுத்துகிறார்.

மேலும்,

'ஐந்திறத்தை (பஞ்சாங்கத்தை) வைத்து நாள்மீன் கோள்மீனைப் பார்த்துப் பருவங்களையும் காற்றையும் மழையையும் கணித்துச் சொல்லி வேளாண் வாழ்வியலில் தனிச்சிறப்புடன் விளங்கி வந்த வள்ளுவர்களையே முதலில் பார்ப்பார் என்றனர்.



'பார்ப்பானுக்கு மூத்த பறையன், கேட்பாறின்றிக் கீழ்ச்சாதியானான்' – என்னும் பழமொழி அதையே சொல்கின்றது. வள்ளுவத்தைப் பூசாரியம் தன்வயமாக்கிக் கொண்ட பின்னர் பூசாரிகளும் தங்களைப் 'பார்ப்பார்' – எனப் போலியாகக் கூறிக்கொண்டதுடன், சாதிமுறையை இறுக்கமாக்கி நெறிப்படுத்தி, வருணக் கொள்கையைப் புகுத்தி அதை வெறித்தனமாகப் பரப்பலாயினர். தவ வாழ்க்கையை வழியாகக் கொண்டிருந்த துறவிகளைக் குறிக்க வழங்கிவந்த 'அந்தணர்' என்னும் நல்லபட்டத்தையும் போலியாகச் சூட்டிக்கொண்டனர்.

– எனத் 'தமிழர் வரலாறு' நூலுள் (பக்கம் . 21) குணா அவர்கள் மிகத் தெளிவுபடவே இதைக் குறிப்பிடுகிறார்.

**'ஆரியப் பார்ப்பனர் திருந்தினாரென்று ஆருனக் குரைத்தது அவர்குணம் ஒன்றே'** – என்றும்,

**'ஆரியப் பார்ப்பனர்கள் அளவில் சிறிய இனத்தவராயினும் அவர்கள் இந்தியாவை குறிப்பாகத் தமிழ்நாட்டைக் கெடுப்பதுபோல் வேறு எந்த இனமும் கெடுக்கவில்லை'** – என்றும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் பார்ப்பனர்களைக் குறிக்குமிடத்தெல்லாம் ஆரியப் பார்ப்பனர் என்றே குறிப்பிடுகின்றார்கள்.

இருப்பினும், தந்தை பெரியார் அவர்கள் பிராமணர் என்று சொல்வது அவர்களின் வேதபுராண மனுதருமங்களை ஏற்று அதன்படி அழைப்பதாகிவிடுகிறது எனும் நோக்கில் பார்ப்பனர் என்றே அழைக்கலானார்.

ஆனால் பார்ப்பனர் எனும் தமிழ்வழக்கு குறித்தோ, அத்தகைய தமிழ்ப் பார்ப்பனர் வாழ்வியல் குறித்தோ பிராமணர்களைப் பார்ப்பனர் என அழைப்பதிலும் உள்ள சிக்கல் குறித்தோ பெரியார் அறிந்து ஒப்புநோக்கில் ஏதும் கருத்து வெளிப்படுத்திடவில்லை.

இது இவ்வாறிருக்க, கழகக் காலங்களுக்குப் பிறகு, பல்லவர் காலங்களிலும், பிற்காலச் சோழர்கள் காலங்களிலும் பெருமளவில் வடக்கிருந்து குடியேறிய ஆரியப் பார்ப்பனர்கள் தமிழகம் முழுக்க பரவி வாழத் தொடங்கினர்.

அரசர்கள் அவர்களுக்கு ஏராளமாய் நிலங்களை **'பிரம்ம தேயங்களாக'** வாரி வழங்கினர். எனவே அந்நிலங்களைப் பெற்ற குறுநில மன்னர்கள் போன்றும், கோயில் வழி, மதவழி தெய்வகுலத்தோர் போன்றும், தங்களைக் காட்டிக் கொண்டதோடு, பிராமணர்கள், பார்ப்பனர்கள் என்பதாகவே தங்களைத் தமிழக மக்களிடையே பழக்கிக்கொண்டனர்.

இப்போக்கு பல நூற்றாண்டு காலமாய்த் தொடரவே, பார்ப்பனர் என்போரே இவர்கள்தாம் என்கிற பழக்கம் தமிழரிடையே தோன்றத் தொடங்கியது.

இச்சூழலில் ஆங்கிலேய ஆட்சியால் அரசுப்பதவிகளிலும், கல்விக்கூடங்களிலும்

படிப்பகம்

www.padippakam.com

பெருமளவில் நுழையவும், ஆளுமை செய்யுமான வகையில் ஆரியப்பார்ப்பனர்கள் கோலோச்சினர்.

'1918ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக அறிக்கை விளக்கப்படி, இளங்கலைப் பட்டம் பெற்ற 15,209 பேரில் பார்ப்பனப் பட்டதாரிகள் 10,269 பேர் என்றும், முதுகலைப்பட்டம் பெற்ற 511 பேரில் பார்ப்பனர் 389 பேர் என்றும், சட்டம் பயின்ற பட்டதாரிகள் 54 பேர்களில் பார்ப்பனர்கள் 48 பேர் என்றும், பொறியியல் பட்டதாரிகள் 160 பேரில் பார்ப்பனர் 121 பேர் என்றும், ஆசிரியப் பணியிருந்த 1,498 பேரில் பார்ப்பனர் 1,094 பேர் என்றும் அறிகிறோம். (தமிழ்நில வரலாறு – கோ.தங்கவேலனார் – பக்கம் 426)

– என்று வரலாற்று அறிஞர் கோ.தங்கவேலனார் அவர்கள் விரிவாகப் பட்டியலிட்டிருக்கிற வகையில் அன்றைக்கு அரசு அலுவலங்களிலும், கல்வித்துறைகளிலும் கோலோச்சிய ஆரியப் பார்ப்பனர்களின் கொட்டத்தை மறுத்த தமிழர்கள், தங்களைப் 'பார்ப்பனரல்லாதவர்' என்றே குறிப்பிடத் தொடங்கினர்.

பெருவாரியான மக்களிடையே பார்ப்பனர் என்கிற சொல் – ஆரியப்பார்ப்பனரைக் குறிப்பதாலே அறிமுகமாகிப் போனது.

ஆரியப் பார்ப்பனர் என்றோ, பிராமணர் என்றோ சொல்வது அருகிப்போனது.

இருப்பினும், பார்ப்பனர், பார்ப்பான் – என்பது மக்கள் வழக்குகளில் பயன்படுத்துவதாக இருப்பினும், அரசியல் அளவில் அவர்களைக் குறிப்பிட ஆரியப்பார்ப்பனர் என்பதே சரியானதாக அமையும் என்பதை நாம் எண்ணிப் பார்த்திடல் வேண்டும்.

அரசியல் அளவில், ஆய்வுகள் அளவிலும் ஆரியப் பார்ப்பனரை நாம் பொதுப்பட 'பார்ப்பனர்கள்' என்று குறிப்பிடப்போவது, நம் பழந்தமிழ் வரலாற்றில் பார்ப்பார் தொழில் பார்த்துவந்த நம் அருந்தமிழர்களின் வரலாற்றை மறந்துவிடுகிற அல்லது மறைத்துவிடுகிற சூழலுக்கு இட்டுக் சென்றுவிடலாம்.

நம் பழந்தமிழ் வரலாற்றுப் பெட்டகங் களின் ஊடாகவே நம் தமிழ்த்தேசிய எழுச்சி க்குக்குரல் எழுப்புகிற நாம் இவற்றில் அக்கறை செலுத்திடல்வேண்டும்.

அப்படியான நம் முயற்சியே நம் தமிழக மக்களிடையேயும் இத்தெளிவை ஏற்படுத்தும்.

– தொடரும்

## தமிழ்வழிக் கல்வி ஆதரவுக் கூட்டமைப்பு

*தமிழ் வழிக்கல்விக்கு ஆதரவாக பல்வேறு அமைப்புகள் இணைந்து தமிழ்வழிக்கல்வி ஆதரவு கூட்டமைப்பு எனும் பெயரில் வரும் பிப்ரவரி 24 வியாழன் அன்று மாலை 4.00 மணிக்கு ஈரோடு பன்னீர் செல்வம் பூங்கா அருகில் தமிழ் வழிக்கல்விக்கான அரசாணையை ஏற்க மறுக்கும் ஆங்கில வழிப் பள்ளி வணிகர்களைக்கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்துவதென்றும் அதைத் தொடர்ந்து தமிழ் வழிக் கல்விக்காக ஒருங்கிணைந்து செயல்படுவதெனவும் முடிவு செய்யப்பட்டது. இக்கூட்டமைப்பு ஈரோடு மாவட்ட அளவிலானதாக இயங்கும்.*

செய்தி

*பா. சண்முகவேல்*

பொருளர், தமிழ்வழிக் கல்வி ஆதரவுக் கூட்டமைப்பு

www.padippakam.com

# ஈரோட்டில் நடந்த
# தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு









உயரட்டும், உயரட்டும்,
விடுதலைக் கொடியிது உயரட்டும்!
ஒடுக்கப்பட்டோர் விடுதலையை,
உணர்த்தும் நீல வண்ணத்தை
நடுவே தாங்கிய விடுதலைக் கொடியிது
விலங்குகள் பொடிபட உயரட்டும்.

தமிழ்த் தேசிய எழுச்சியை,
பொதுமை வேண்டும் புரட்சியை,
மேலும் கீழும் சிவந்து சூழும்
விடுதலைக் கொடியிது உயரட்டும்.

காற்றைக் கிழித்து விண்ணில் பரவிய இந்த முழக்கத்தை முத்தமிட்டு அசைந்தது, சென்ற டிச–19 அன்று ஈரோட்டில் தொடங்கிய தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் ஏற்றப்பட்ட **த.ஒ.வி.** இயக்கக்கொடி.

காலை 10.00 **மணிக்குத்** தொடங்கிய இம்மாநாட்டின் கொடியை தமிழர் கொற்றத்தைச் சேர்ந்த புலவர். வடிவேலனார் ஏற்றி வைத்தார். தோழர். தமிழ்ப்பறை வரவேற்க, தென்மொழி அவையத்தைச் சார்ந்த பாவேந்தர் இராமலிங்கம் அவர்களும், கேரள திருவள்ளுவர் ஞானபீடத்தைச் சார்ந்த சிவானந்தர் அவர்களும் வாழ்த்துரை வழங்கிட, அதன்பின் அரசியல் அரங்கம், வாழ்வியல் அரங்கம், எழுச்சி அரங்கம், மதுரை அறிவுச்சுடர் நடுவம் மற்றும் தமிழ்வழிக் கல்விக் கழகம், ஈரோடு மாவட்ட த.ஒ.வி.இ. தோழர்கள் ஆகியோரின் கலைநிகழ்ச்சிகள், தோழர். ஒப்பாரி அவர்களின் பாடல்கள் என நீண்ட இம்மாநாடு இரவு 10.00 மணிக்கு தோழர். பா. சண்முகவேல் அவர்களின் நன்றியுரையுடன் நிறைவுற்றது.

படிப்பகம்

# தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு தீர்மானங்கள்

த.ஒ.வி. இயக்க மையப் பொதுக்குழு உறுப்பினரும், இதழ்க்குழு உறுப்பினருமான தோழர். செந்தழல் தலைமையேற்க மாநாட்டின் தீர்மானங்களை இயக்கத்தின் மையப் பொதுக்குழு உறுப்பினரும், ஈரோடு மாவட்டப் பொறுப்பாளருமான நிலவன் முன்மொழிந்தார்.

*தீர்மானம் – 1*

இந்தியப் பார்ப்பனியச் சமூகக்கட்டமைப்பு தன்னைச் சாதியத்தின் அடித்தளத்தோடும் மதவாதத்தின் அரசியலோடும் பிணைத்துக் கொண்டிருக்கிறது.

இந்திய–இந்து மதவாத–சாதியப் பார்ப்பனியக் கட்டமைப்பை வீழ்த்த வேண்டுமெனில், தமிழக மக்களை ஊடறுத்துப் பிளவுபடுத்தும் பார்ப்பனியத்தின் அடித்தளமாகிய சாதியமைப்பைத் தகர்க்கிற உணர்வை ஆதிக்கச் சாதிவெறி எதிர்ப்புப் போராட்டத்தின் மூலம் வளர்க்காமல் தமிழ்த் தேசியம் எழுச்சி கொள்ள முடியாது.

ஒற்றையமாகிவரும் உலக அரங்கில் தமிழ்த் தேச மக்களுக்கு உரிய தேசிய குடியாட்சி உரிமைகளைப் பெறுவதற்கு எவ்வாறு வல்லரசிய எதிர்ப்புப் போராட்டம் கட்டாயமோ, அவ்வாறே சாதி ஒழிப்புப் போராட்டமும் கட்டாயமாகும்.

*தீர்மானம்*

வல்லரசிய–இந்தியப் பார்ப்பனிய எதிர்ப்பு, மற்றும் ஆதிக்கச் சாதி ஒழிப்புப் போராட்டம் ஆகியவை இணைந்த தமிழ்த் தேசிய எழுச்சி மட்டுமே தமிழக மக்களுக்கு உரிய குடியாட்சி உரிமைகளைப் பெற்றுத் தரும் என்று தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் வலியுறுத்துகிறது. அத்தகைய ஆதிக்கச் சாதிவெறி எதிர்ப்புப் போராட்டத்தோடு கூடிய தமிழ்த் தேசிய எழுச்சிக்குத் தமிழக மக்களையும், தமிழ்த் தேசிய இயக்கங்களையும், பிற குடியாட்சி உணர்வினர்களையும் அழைக்கிறோம். இந்தியப் பார்ப்பனியக் கட்டமைப்பு சரிந்து வீழட்டும்! தமிழ்த் தேசியம் மக்கள் தமிழகமாய் எழுச்சி கொள்ளட்டும்!

*தீர்மானம் – 2*

ஒரு சமூக மக்களின் வாழ்வில் வளர்ச்சியுறும் தேசியக் கூறுகள் இல்லாமல் ஒரு தேசியம் அடையாளப்பட முடியாது. தமிழ்த்தேசம்–தனக்குரிய அடையாளங்களாக மொழி, வரலாறு, பொருளியல் பின்புலம், அரசியல் ஆளுமை – ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது.

இவ்வகையில் எந்தவித தேசியத் தன்மைகளும் இல்லாத – இந்தியப் பார்ப்பனிய ஆளுமையர்க்கான – ஒரு சொல்லாடலாகவே 'திராவிடம்' எனும் கருத்தியல் இருந்து வருகிறது.

வல்லரசியச் சார்புக் கருத்தியலாக வலம் வந்த இந்தியமும், திராவிடமும் ஒருபுறம் பல்வேறு தேசிய இனமக்களை ஒடுக்கியும், அவர்களின் தேசிய எழுச்சிகளுக்குத் தடையாகவும் இருந்து வந்துள்ளன.

பார்ப்பனியக் கட்டமைப்பைச் சார்ந்து இந்தியம் ஒடுக்கும் கருவியாக இருந்து வரும் அதே வேளையில் மறுபுறம் தமிழ்த் தேசிய எழுச்சியைத் தடுக்கும் கருத்தியலாக திராவிடம் இருந்து வருகிறது.

*தீர்மானம்*

பார்ப்பனிய கட்டமைப்பை எதிர்த்து தமிழ்த்தேசிய எழுச்சிக்காகப் போராடும் இந்த வேளையில் திராவிடம் என்னும் கருத்தியலையும் தோலுரிக்க வேண்டியது கட்டாயமாகின்றது – என்று இம்மாநாடு அறிவிக்கை செய்கிறது.

தேசியத்தை திரை மறைக்கும் திராவிடத்தைத் தோலுரிப்போம்! எழுச்சியுறும் தமிழ்த் தேசியத்தை வளர்த்தெடுப்போம்!

*தீர்மானம் – 3*

தமிழக மக்களின் தேசிய உரிமையை மறுக்கிற முகமாக இம்மக்களின் இனத்தை இந்தியன் எனப் பதிவு செய்கிற நிலை உள்ளது. தமிழகம் இந்திய அரசின் கீழிருக்கிற இன்றைய சூழலில் தமிழக மக்களின் இனப்பதிவில் தமிழ்த் தேசிய இனமென்றும் குடியுரிமைப் பதிவில் இந்தியக் குடிமகன் என்றும் பதிவு செய்வதே தேசிய உரிமையை மதிக்கின்ற குடியாட்சிப் பண்பாகும்.

இத்தகைய குடியாட்சிப் பண்பற்ற இந்திய அரசு தமிழக மக்களை இந்தியன் எனக்குறிப்பதும், தமிழக மக்கள் அதனை எதிர்த்திடாமல் இருப்பதும் மிகப்பெரும் அவமானமாகும்.

*தீர்மானம்*

தமிழக மக்களை இனவழியில் குறிக்கையில் தமிழ்த்தேசிய இனம் என்று குறிப்பிட வலியுறுத்தி, வரும் ஏப்பிரல்–11 அன்று சென்னையில் ஆர்ப்பாட்டப் போராட்டம் நடத்துவது என்றும் இந்தத் தேசிய தன்மானப் போராட்டத்தின் வெற்றி என்பது தமிழ்த் தேசியத்தில் அக்கறை கொண்ட அமைப்புகளின் ஒன்றுபட்ட போராட்டத்தில் தான் அடங்கியுள்ளது என்பதால் இதற்கெனக் கூடிச் செயல்புரிய தமிழக மக்களையும், தமிழ்த் தேசிய அமைப்புகளையும் இம்மாநாடு அழைக்கிறது.

இந்தியர் எனும் இனப்பதிவை விலக்கச் செய்வோம்! தமிழ்த் தேசிய இனப்பதிவைப் பெறுவோம்!

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



## இம்மண்ணிலிருந்து உயிர்ப்போம்!

தமிழ்த் தேசிய எழுச்சி என்கிற அடிப்படையான தலைப்பு, தேசிய இனத்திற்கான காரணத்தைக் கொண்டது. தேசிய இனஎழுச்சி என்பது பொதுவாக ஒரே கண்ணோட்டத்தில் அனைவருடைய புரிதலுக்கும் உட்பட்டது இல்லை.

ஒரு தேசத்தினுடைய மாற்றம், அந்த தேசத்தினுடைய அடிப்படை ஒடுக்குமுறைகளிலிருந்தான எழுச்சியிலிருந்து அமையும். அந்த ஒடுக்குமுறைகள் என்னவென்பதை அந்த தேசத்தினுடைய அகப் புறக்காரணிகளுடைய சிக்கல்களை ஆழ ஆராய்ந்து அந்தக் கோணங்களில் அதனுடைய விடுதலை எழுச்சியை மேற்கொள்ளாமல், ஒரு விருப்பத்தின் காரணமாக, இந்தச் சமூகத்தினுடைய ஒரு சில வகுப்பினரை மட்டுமே சார்ந்திருக்கிற ஒரு சில செய்திகளை மட்டுமே மேற்கொள்வதாக இருக்குமானால் அது அந்த சமூகத்தினுடைய அடிப்படை விடுதலையைப், அடிப்படை மக்களுடைய விடுதலையைச் சார்ந்ததாக அமைந்துவிடாது.

எனவே, இந்தச் சமூகத்தினுடைய அடிப்படைச் சிக்கல்கள் என்னென்ன? இந்தச் சமூகத்தினுடைய தேசிய விடுதலைக் கோணத்தில் அந்தச் சிக்கல்கள் தீர்க்கப்படுகிறதா? என்பது பற்றிய ஆழ்ந்த சிந்தனை தமிழ்த் தேசிய சிந்தனையாளர்கள் அனைவருக்கும் தேவை.

இதுபோன்ற காரணங்களைப் பகுத்தாய்ந்து பொதுவுடைமையாளர்கள், இந்தத் தமிழ் மண்ணினுடைய, தமிழ்த் தேசிய விடுதலையில் அக்கரையுள்ள மார்க்சிய சிந்தனையாளர்கள் அடிப்படையாகக் காலூன்றி இந்த மண்ணிலிருந்து உயிர்ப்பித்து இந்தச் சாதிஒழிப்பு, சமூகவிடுதலை, அடிப்படை மக்கள் மீதான பொருளியல் ஆளுமைகளை அறுத்தெறிகிற உடைத்தெறிகிற ஒரு நோக்கம் வந்து, முழுமையான இயக்கக் கட்டமைப்பின் வழியிலான அணிதிரட்டலே இந்தச் சமூக மாற்றத்தைச் செய்யமுடியும்.

அதற்கான கண்ணோட்டங்களில் இன்றைக்குப் பல்வேறு இயக்கங்கள் முனைப்பாகச் சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றன. இதற்கான செயல்களில் முனைப்பாக ஈடுபட்டுவருகின்றன. இந்த முனைப்புகள் தன்தன் அளவில் நாம் முழுமையாய்ச் சிந்திந்துவிட்டோம். நம்முடைய கருத்துக்களை முழுமையாக முன்வைத்துவிட்டோம். இதுதான் ஒரு முழுமையான விடுதலையைத் தரும் என்கிற ஒரு கண்மூடித்தனமான, முழுமைப்பட்டதாக எண்ணிக்கொள்கிற ஒரு போக்கைக் களைந்து, நாம் அனைத்து இயக்கங்களும் பல்வேறு சூழல்களில் இயங்கினாலும் இந்த இயக்கங்கள் முன்வைக்கிற திறனாய்வுகளை ஏற்பதும், அந்தத் திறனாய்வுகளுக்கு தக்கபடியான விளக்கங்களை அளித்து ஒரு கூட்டுத் தருக்கங்களை, விவாதங்களை நாம் தொடங்கி, தொடர்ந்து நமக்குள் விவாதித்துக் கொண்டும், செயலாற்றிக்கொண்டும் இருப்பதற்கான முயற்சிதான் தமிழ்த் தேசிய எழுச்சியை முழுமைப்படவைக்கும்.

அப்படியான ஓர் எழுச்சிக்கான ஒரு சூழலை தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் இம்மாநாட்டின் வழியாகத் தொடங்கி வைக்கவேண்டும் என்கிற முனைப்பில்தான் இந்த அரங்கத்தை ஏற்பாடு செய்தோம். இயக்கங்களுக்குள்ளும், இயக்கங்களுக்கப்பாலும் திறனாய்வுகளை, தன் திறனாய்வுகளை எவ்வளவுக் கெவ்வளவு மேற்கொள்கிறோமோ அந்த அளவிற்குத் தமிழ்த் தேசிய எழுச்சி முனைப்பாய்ச் செல்லமுடியும்.

தோழர். **பொழிலன்**, த.ஒ.வி.இயக்கச் செயற்குழு உறுப்பினர், இதழ்க்குழு பொறுப்பாளர், அரசியல் அரங்க தலைமையுரையிலிருந்து.



## தமிழ்த் தேசியம் மீட்க . . .

தமிழ்த்தேசியம், ஒரு தேசியத்தை மீட்டெடுப்பதற்கான முதல்தேவை, தேசியத்தின் முற்போக்கு, பிற்போக்குத் தன்மைகளைத் தீர்மானிக்கும் அளவுகோல்களும், தன் முன்னேற்றத் தன்மையும் மக்கள் நாயக உணர்வும், இயல்பும் ஆகும் - லெனின்,

தன்னுடைய நாடு இறையாண்மை பெற்ற தனி நாடாக மலரவேண்டுமென்ற பேரவாவைக் கொண்ட மக்களின் தன்னுணர்வே அந்நாடு இறையாண்மை பெறுவதற்கான அடிப்படையான முதல் தேவை - இர்பான்அபீப்.

**இந்த இரண்டு** மார்க்சியர்களின், மக்கள் சிந்தனையாளர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டும், வினைவலியும், தன்வலியும், மாற்றான்வலியும் துணை வலியும் தூக்கிச்செயல் என்ற நம் வள்ளுவரின் வழிகாட்டுதலையும் மனதில் கொண்டு தாம் தமிழ்த் தேசியத்தை மீட்கமுடியும்.

தோழர். **கரடிப்பட்டி கண்ணன்**, உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், அரசியல் அரங்க உரையிலிருந்து.

படிப்பகம்

www.padippakam.com



# திராவிட அரசியல் வெற்றி பெற்று விட்டது!

தமிழனை அடிமைப்படுத்தியதிலே, தமிழ் வரலாற்றை அழிப்பதிலே, தமிழ் மொழியினுடைய மேன்மையை அழிப்பதிலே, தமிழனுடைய பொருளியலை மற்றவனுக்கு அடகு வைப்பதிலே, தமிழன் மீண்டும் எழக்கூடாது, எழமுடியாது என்ற வகையிலே ஒடுக்கி வைத்திருப்பதிலே, திராவிட அரசியல் என்று சொல்லக்கூடியது அநேகமாக வெற்றி பெற்றுவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். நாம் இதை ஏற்றுக் கொள்ளமுடியாது என்பதையும் இப்போது தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழன் தன்னுடைய இயற்கையை காப்பாற்றி ஆகவேண்டும். அந்நியர்கள் வந்து இங்கே நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டியதில்லை. பெரிய முதலாளிகளுக்கும், நடுத்தர மக்களுக்கும் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்துவதற்கான கார் தொழிற்சாலைகள் இங்கு வேண்டியதில்லை, ஏற்றுமதிக்காகத்தான் உற்பத்தி என்று சொல்லக்கூடிய அரசியல் பொருளாதாரம் எங்களுக்கு வேண்டியதில்லை, இந்த அந்நிய செலாவணி வந்துவிடும் என்பதற்காகத் தோல் பதனிடும் தொழிற்சாலைகள், சாயப்பட்டரைகள், இறால்பண்ணைகள் முதலியவை எங்களுக்கு வேண்டாம். இவைகளெல்லாம் அடித்தள மக்களுடைய வாழ்க்கையை அழிக்கக் கூடியவை. இந்த அரசியலும், பொருளியலும் தொடர்ந்து நிலவுமென்று சொன்னால் தமிழ்மக்கள் மீது சுரண்டல் அதிகரிக்கும், ஒடுக்குமுறைகள் அதிகரிக்கும், காவல்துறை, அரசியல்வாதிகளின் தொல்லை அதிகரிக்கும், ஊழல் மேலும் அதிகரிக்கும், வாழ்க்கை நஞ்சுக்கு இரையாகிவிடும். நாம் தமிழனாக இருக்கமுடியாது. அகதிகளாக அலைய வேண்டிவரும்.

**கோவை ஞானி,** ஆசிரியர் நிகழ்
அரசியல் அரங்க உரையிலிருந்து.



# மார்க்சியம் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும்!

எங்கெல்சு கேட்டார், வாழ்க்கை என்பது என்ன? Life is Production and Reproduction என்றார். வாழ்க்கை என்பது உற்பத்தியும், இனப்பெருக்கமும்தான். இந்த உற்பத்திக்கான உழைப்பு, இனப் பெருக்கத்திற்கான காதல் திருமணம், இவை இரண்டையுமே வர்ணாஸ்ரம தர்மத்தில் கட்டிப்போட்ட சமூகம் இந்து சமூகம் இன்னார் இன்ன உழைப்பு, இன்னார் இன்ன வேலை, அதையும் முடித்துவிட்டார்கள். இன்னார் இன்ன சாதிக்குள்தான் திருமணம் முடித்துக்கொள்ளவேண்டும். அதையும் முடித்து விட்டார்கள்.

எனவேதான் சாதி என்பது சமூகத்தின் கட்டுமானத்தில் பண்பாடு என்ற மேல்தளத்திலும் இருக்கிறது. உற்பத்தி உறவு என்ற கீழ்த்தளத்திலும் இருக்கிறது. சாதி மேல்தளத்தில் மட்டுமில்லை, கீழ்த்தளத்திலும் இருக்கிறது. திருமணஉறவு பண்பாடு என்கிற வகையில் மேல்தளத்திலும் இருக்கிறது. இது ஒட்டுமொத்தச் சமூக மாறுதல் நடைபெறும் பொழுதுதான் முற்றாகத் துடைத்தெறிய முடியும். அந்த வகையிலேதான் கம்யூனிசம் என்பது சாதி வர்ணாஸ்ரம தர்மத்திற்கு உட்பட்ட நம்முடைய சமூகத்திற்கு மிகமிகத் தேவையானது.

தந்தை பெரியாரும், அண்ணல் அம்பேத்காரும் வர்ணாஸ்ரம தர்மத்தோடு எதிர்த்துப் போராடிய மாவீரர்கள். அவர்களுடைய அனுபவங்கள், அவர்களுடைய சிந்தனைகள் அவர்களுடைய வழிகாட்டல்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு மார்க்சியம் தன்னைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும். எந்தத் தத்துவமும், எல்லாம் முடிந்துவிட்டது, ஏற்கனவே இது அறியாதது ஒன்றுமில்லையென்றால் அது வேதம், அது ஒரு கடுதாசி, எந்தத் தத்துவம் வளர்ந்து கொண்டிருக்கிறதோ அதுதான் உயிரோடிருக்கும். வளர்ந்து முடிந்துவிட்டது என்று ஒரு தத்துவம் இருந்தால் அதைக் கண்காட்சி சாலைக்குக் கொண்டுபோங்கள்.

**பெ. மணியரசன்,** பொதுச்செயலர்,
தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி
அரசியல் அரங்க உரையிலிருந்து.

படிப்பகம்

www.padippakam.com



# மொழி மட்டுமே தேசிய இனம் ஆகாது

மொழிச் சிறுபான்மையினர், தேசியச் சிறுபான்மையர் போல் தோற்றமளிப்பதற்கு ஒரு அடிப்படைக் காரணமுண்டு. அது என்னவென்றால் தேசிய இனக்கூறுகளில் முதன்மைக்கூறாக இருப்பது மொழி. ஒரு மொழியைச் சேர்ந்தவனாக இருப்பதுதான் தேசிய இனத்தைச் சேர்ந்தவனாக இருப்பதற்குரிய முதல் தேவை.

ஆனால் மொழி மட்டுமே தேசிய இனம் ஆகாது. தமிழ்த் தேசிய இனம் என்ற ஒன்று உருப்பெறுவதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழும், தமிழர்களும் இருந்தார்கள். தமிழ் இருந்ததாலேயே தமிழ் பேசுகிற தமிழர்கள் இருந்ததாலேயே இன்னும் சொல்லப்போனால் வடவேங்கடத் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம் என்று சொல்லப்படுகிற மண்ணும் இருந்ததாலேயே தமிழர்கள் தமிழ்த் தேசிய இனம் ஆகிவிடவில்லை. ஒருமொழி வழிச் சமூகமாக அவர்கள் இருந்தார்கள்.

ஒரு மொழிவழிச் சமுதாயம் ஒரு தேசிய இனமாக உருப்பெறுவதற்கு மொழிக்கூறு, நிலக்கூறு, மனக்கூறாகிய பண்பாட்டுக்கூறு இவை மட்டுமே போதுமானதாய் இல்லை. இவற்றுக்கும் மேலாக ஒரு பொருளியல் வளர்ச்சி தேசிய சந்தையின் உருவாக்கம் மக்களுக்கிடையிலான பொருளியல் பிணைப்பு, சரக்குப் பொருளுற்பத்தியின் வளர்ச்சி இவையெல்லாம் தேவைப்பட்டன. இந்த வளர்ச்சி அயலாட்சியின் கீழேதான் இங்கே வளர்ந்து உருப்பெற்றது. ஒரு முழுமைப்பெற்ற தேசிய இனமாக, தேசமாக நாம் அதன் பிறகுதான் உருவாக முடிந்தது.

தோழர். **தியாகு,** பொதுச்செயலர் தமிழ் தமிழர் இயக்கம்,
அரசியல் அரங்க உரையிலிருந்து.



# இந்திய ஒடுக்குமுறைப் பண்பாடு!

பண்பாட்டைப் பற்றிப் பேசுகிற பொழுதெல்லாம் இந்தியப் பண்பாடு எதுவாக இங்கே நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தியா பல் தேசங்களை உடைய ஒரு நாடு. பல் தேசியங்களை அடக்கி ஒடுக்கக்கூடிய ஒரு பண்பாடாக இந்தியப் பண்பாடு என்பது நிலைநிறுத்தப்படுகிறது.

தேசிய இனங்களை அடக்கி ஒடுக்கக்கூடிய பண்பாடு அதுதான் அதனுடைய அரசியல் வெளிப்பாடும், அது நிலை நிறுத்தக்கூடிய பண்பாடும். பண்பாட்டுச் சுரண்டலாக பண்பாட்டு வெளிப்பாடாக எதுவெல்லாம் இருக்கிறதோ! அது பல தேசியங்களை ஒடுக்கக்கூடிய விதமாக அமைந்துவிடுகிறது.

பார்ப்பனியப் பண்பாடு, இந்துமதப் பண்பாடு என்கிறோம். இந்துமதப் பண்பாடு எதைப் பிரதானப்படுத்துகிறது. இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்துச் சாதிகளையும் ஒன்றிணைக்கக்கூடிய ஒரு பண்பாடாக, சாதிகளை, சாதி இருப்பை அப்படியே அங்கீகரித்துக்கொண்டு சாதிகளை ஒன்றிணைக்கக்கூடிய ஒரு பண்பாடு. பார்ப்பனியப் பண்பாடு மேல், கீழ் என்று உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று, ஒதுக்கப்பட்டவன், ஒதுங்கப்பட்டவன் என்ற வரையறைகளைப் போட்டு பிரித்தாளுகிற பண்பாடாக அது இருக்கிறது.

**உஞ்சைராசன்,** அமைப்பாளர், தலித் பண்பாட்டுப் பேரவை
வாழ்வியல் அரங்க அரங்க உரையிலிருந்து.

# தமிழ்நாடு தாங்காது



காவிரி ஆற்றை நாம் வெகுவேகமாக இழந்துகொண்டு வருகிறோம். பெரியாற்றை நாம் முற்றாக இழந்து விட்டோம். இனி அரசியல் சாகசத்தினாலோ, ராஜதந்திரத்தாலோ பெரியாற்றை மீட்பதென்பது முடியாது.

காரணம்! அங்கே மார்க்சிஸ்ட் கட்சியை முன்னிலைப்படுத்தி இரண்டு சர்வகட்சி மாநாடுகள் போட்டுவிட்டார்கள் கேரளாவிலே. ஜெயலலிதா கடைசி ஆண்டு இருக்கும்போது, திருவனந்தபுரத்திலே சர்வ கட்சி கூட்டம் போட்டு, பெரியாறு நீர் மட்டுமல்ல மேற்கு நோக்கி ஓடும் 1086 டி.எம்.சி. நீர் கடலுக்குள்ளே வீணாகிறதே அந்த நீரிலும் ஒரு சொட்டு தண்ணீர் கொடுக்க மாட்டோம் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.

தமிழின எழுச்சி சரியாக இருந்தால் மார்க்சிஸ்ட் கட்சிக்குத் தமிழ்நாட்டிலே வேலையில்லை என்று நாம் சொல்லவேண்டும். இப்பொழுதுதான் தமிழின உணர்ச்சி பட்டுவிடப்பட்ட நிலையிலிருந்து துளிர்த்து வருகிறது. இந்தச் சூழ்நிலையிலே காவிரி ஆற்றையும் நாம் இழந்துவிட்டால் அதனுடைய விளைவைத் தமிழ்நாடு தாங்காது.

**பூ.அர. குப்புச்சாமி,** தலைவர், காவிரிக் காப்புக்குழு
வாழ்வியல் அரங்க உரையிலிருந்து.

படிப்பகம்

www.padippakam.com



## விடுதலை பெற்று என்ன பயன்?

தமிழ்த் தேசியம் என்பது, தமிழக விடுதலை அதாவது அரசியல் விடுதலை என்பதான கருத்துதான் முழுமையாக வைக்கப்பட்டது. இன்று ஒருவேளை ஏதோ ஒருவழியில் ஏதோ ஒரு போரை நடத்தி தேசிய விடுதலையைப் பெற்றுக் கொள்கிறோம் என்று வைத்துக்கொள்வோம்.

இந்திய விடுதலை என்ன ஆயிற்று, முன்பு ஆங்கிலேயன் மட்டும் சுரண்டிக்கொண்டு சென்றான். இன்று உலகிலுள்ள எல்லாப்பயலும் இந்த நாட்டைக் கற்பழித்துக் கொண்டிருக்கிறான். அது போன்ற நிலைமை வராதா? அப்படியொரு தேசிய விடுதலையால் நமக்கு என்ன பயன்? இன்னும் இதே சாதியை வைத்துக்கொண்டு, இதே பிற்பட்ட பண்பாடுகளை வைத்துக்கொண்டு இதே வளர்ச்சியற்ற நிலையை மண்ணில் புரள்கின்ற மக்களை வைத்துக்கொண்டு விடுதலை பெற்று என்ன பயன்? ஆக, இவர்களுக்கு என்ன வேண்டும். இவர்கள் குடிசையில் இருக்கிறார்கள். சேரிகளில் கிடக்கிறார்கள். நகரத்துச் சாக்கடைகளின் மேல் குடியிருக்கிறார்கள். இப்படி வைத்துக்கொண்டு எந்த விடுதலையைப் பெற்று என்ன செய்யப்போகிறோம்.

இவர்களுக்கு உண்மையில் வேண்டியதென்ன? இவர்களுக்கு ஒரு நல்ல வாழ்வு அமைத்துக் கொடுக்கவேண்டும். நம்மிடமிருக்கிற குறைகள் சாதிக்குறைகளை நீக்கவேண்டும். அப்படியானால்தான் நாம் ஒற்றுமைபெற்று எந்த ஓர் எதிரியின் முன்னாலும் நிற்கமுடியும். இன்று இருக்கிற நிலையில் எந்தவொரு எதிரியும் எளிதாக ஒரு சிலையை உடைப்பதன் மூலம் நம்முடைய போராட்டத்தைத் தகர்த்துவிட அவனால் முடிகிறது.

**குமரிமைந்தன்,**
**அமைப்பாளர்**
**தமிழக மக்கள் பொருளியல் உரிமைக்கழகம்,**
**வாழ்வியல் அரங்க உரையிலிருந்து.**



## தாயம் என்றால் உரிமை!

தாய்மொழி என்றால் தாயால் பயிற்றுவிக்கிற மொழி என்று பொருள்கொள்ள முடியாது. இந்தத் தாய்மொழி தாய்நாடு என்று சொல்லக்கூடிய வழக்கே, பல தமிழறிஞர்கள் அது ஏதோ தமிழனுடைய பரம்பரை, தமிழனுடைய மரபாக நீண்ட நாளாக சொல்லிக்கொண்டு வருகிறது என்றெல்லாம் சொன்னாலும் கூட அப்படி தாய்மொழி என்றோ தாய்நாடு என்றோ தமிழிலே எந்த இலக்கியத்திலும் எங்கேயும் பதிவில்லை. தாய்மொழி என்று சொல்வது வழக்கமில்லை. தாய்நாடு என்று சொல்வதும் வழக்கமில்லை. இது அண்மைக்காலத்திலே ஏற்பட்ட வழக்குதான்.

தமிழைத் தாயாகப் போற்றினார்கள் என்பது வேறு. ஒன்றைத் தாயாகப் போற்றுவது என்பது வேறு. தாய்மொழி என்பது வேறு. ஆக, தாயால் பயிற்றுவிக்கப்பட்ட மொழி என்ற பொருளெடுத்துச் சொன்னவுடனே ஒரு பயல் சொல்கிறான் தமிழர்களுக்குத் தமிழ் தாய்மொழி சமஸ்கிருதம் தந்தை மொழி என்று. அவன் பதினெட்டு மொழியும் படித்த பண்டிதன், சங்கராச்சாரி. சமஸ்கிருதம் தந்தை மொழியாம்.

தாய்மொழி என்பதற்கு என்ன பொருளென்றால் உரிமைமொழி என்று பொருள். தாயம் என்றால் உரிமை. அவருக்கு உரிமையாக இருக்கக்கூடிய மொழி, உரிமையாக இருக்கக்கூடிய நாடு என்பது போல, அந்தத் தாய் என்ற சொல்லுக்கு உரிமை என்று பொருள்.

**புலவர். இறைக்குருவனார்.**
**ஒருங்கிணைப்பாளர்**
**தென்மொழி அவையம்,**
**வாழ்வியல் அரங்க உரையிலிருந்து.**

படிப்பகம்

www.padippakam.com



## அகில இந்திய கட்சிகள் சரிகின்றன!

நம்மைப் பொறுத்த அளவில் இந்தத் தீர்மானங்களிலே சொல்லப்பட்டிருப்பதைப் போல முதலில் நம்முடைய மக்களுக்கு இந்திய தேசியம் என்ற மயக்கத்திலிருந்து அவர்களை விடுவிக்கவேண்டும். ரெண்டாவது, திராவிட தேசியம் என்ற அந்த ஏமாற்று மாயையிலிருந்து நம்முடைய மக்களை விடுவித்து ஆக வேண்டும். இன்றைக்கு இந்திய அரசியலில் உருவாகியிருப்பதைப் போல ஒரு நல்ல சூழ்நிலைமை இனி எப்போதும் உருவாகாது. இந்திய தேசியத்தின் அடிப்படையிலே உருவாக்கப்பட்ட அகில இந்தியக்கட்சிகள் இன்றைக்கு சரிந்து கொண்டிருக்கின்றன. எந்தக் கட்சியானாலும் இனிமேல் அகில இந்திய அளவிலே வலிமை பெற்ற ஒரு கட்சியாக, எல்லா மாநிலங்களிலும் ஆட்சி செய்கிற ஒரு கட்சியாக, மத்தியிலும், மாநிலத்திலும் ஏகபோகம் செய்கிற ஒரு அரசியல் கட்சி, அகில இந்திய அரசியல் கட்சி என்பது இனிமேல் எந்தக்காலத்திலும் வரப்போவதில்லை.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, இந்தியா பூராவும் ஆண்ட கட்சி, இந்திய விடுதலைக்குப் போராடிய கட்சி, கிட்டத்தட்ட 40 ஆண்டுகாலம் இந்தியாவை ஆண்ட ஒரு கட்சி இன்றைக்கு சிதைந்து போய் சில மாநிலங்களில் மட்டுமே இருக்கக்கூடிய ஒரு கட்சியாக அது ஆகிவிட்டது. அந்தக் கட்சியிலே இருந்தவர்களெல்லாம் விலகிப்போய் ஒவ்வொருவரும் அந்த மாநிலக்கட்சிகளைத் தொடங்குவதிலே முனைந்திருக்கிறார்கள. காங்கிரஸ் கட்சியின் படுதோல்விக்கு என்ன காரணம் என்று அறிவதற்கான ஏ.கே. அந்தோணி தலைமையிலே அமைக்கப்பட்ட அந்தக் குழுவிலே என்ன சொல்கிறார்கள். மாநிலக்கட்சிகளை எல்லாம் பி.ஜே.பி. சேர்த்துக்கொண்டது. நாம் மாநிலக்கட்சிகளை சேர்க்கமுடியவில்லை. ஆகவே நாம் தோற்றுப்போனோம் என்று சொல்கிறார்கள். அகில இந்திய மமதை என்பது குறைந்து போய்விட்டது.

**பழ. நெடுமாறன்,**
**தலைவர், தமிழர் தேசிய இயக்கம்**
**எழுச்சி அரங்க உரையிலிருந்து.**

## பெரியார் பின்வாங்கவில்லை!



இந்த இறுதி அமர்வில் நிறைவேற்றப்பட்ட மூன்று தீர்மானங்களிலும் எனக்கு, நான் சார்ந்திருக்கின்ற மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சிக்கு முழுமையான உடன்பாடு உண்டு என்றாலும், இரண்டாவது தீர்மானமாகிய இந்தத் திராவிடம் பற்றிய கருத்திலே மாறுபாடு இல்லாவிட்டாலும் கூட, ஒரு கயமையின் ஊற்றாக விளங்கிக் கொண்டிருக்கிற அரசியலாளர்களை முன்னிறுத்துவதாக திராவிடம் இல்லை.

திராவிடம் என்பதற்கு கலைஞர் ஒரு அடையாளம் என்று நாம் நினைக்கிறோம். அல்ல! உண்மையில் இப்பொழுதிருக்கிற கலைஞர் திராவிடம் என்பதற்கு ஒரு அவமானச் சின்னம். அந்தச் சின்னத்தை நாம் திராவிடம் அதை முன்னிலைப்படுத்துவதாக இன்னும் கூட எண்ணிக் கொண்டிருக்க வேண்டாம், ஏனென்றால் 'பெரியார்' திராவிடர் கழகத்தை அமைத்திருந்தாலும், இங்கு காலை முதல் கொண்டு இந்த மாநாட்டின் பலநிலைகளில் பேசிய தோழர்கள் அனைவருமே தம்முடைய 1938 முழக்கமாகிய 'தமிழ்நாடு தமிழருக்கே' என்கிற முழக்கத்திலிருந்து தாம் மறைகிற 73 வரை அவர் பின்வாங்கவில்லை. தம்முடைய செயலிலே தமிழ் தேசியத்தைத்தான் முன்னிறுத்திப் போராடினார்.

**பாவலர். தமிழேந்தி,**
**மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி, எழுச்சி அரங்க உரையிலிருந்து.**

www.padippakam.com

# தமிழன் என்கிற மயக்கத்திலே!



கிட்டத்தட்ட 90 ஆண்டுகள் அன்னிய ஏகாதிபத்தியத்திடமிருந்து இந்த நாட்டை விடுதலை பெற வைக்கவேண்டும் என்ற அடிப்படையில் பார்ப்பனிய மயக்கத்திலே கிடந்த இந்தியன் என்ற ஒரு மாயையை உருவாக்கி, இங்கு சாதியில்லை, மதமில்லை, மொழியில்லை, இனம் பார்க்கக்கூடாது என்ற ஒரு அடிப்படையை கருத்தாக வைத்து இந்தியனாக அணிதிரட்டி இந்த நாட்டை 1947லே விடுதலை பெற வைத்தார்கள்.

விடுதலை பெற்றபிறகு இந்த நாட்டிலிருக்கக்கூடிய அதிகாரம் என்று சொல்லக்கூடிய ஆளுமையை மூன்று சதமுள்ள பார்ப்பனர்கள் மட்டுமே பிடுங்கிக்கொண்டார்கள் என்ற ஆத்திரத்தில் அடுத்து அணிதிரண்ட திராவிட இயக்கங்களுடைய தலைமையிலே போரிட்ட 45 ஆண்டுகாலப் போராட்டத்திலே திராவிடன் என்ற மயக்கத்திலே வைத்திருக்கிறார்கள்.

இப்படி இந்தியன் என்ற மயக்கத்திலே 90 ஆண்டுகளும், திராவிடம் என்ற மயக்கத்திலே 45 ஆண்டுகளும் இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் மூழ்கிக்கிடந்தார்கள். இப்பொழுது அடுத்த கட்டமாக தமிழன் என்ற மயக்கத்தில் ஆழ்த்த நினைக்கிறார்கள் என்றுதான் நாங்கள் வேதனை கொள்ளமுடியும்.

**நாகராசன்,**
**பொதுச்செயலர், ஆதித் தமிழர் பேரவை**
**எழுச்சி அரங்க உரையிலிருந்து.**

# தமிழ்த் தேசியம் எழுசசி பெற!

பல்வேறு அரசியல் கட்சிகளிலேயிருந்த தாழ்த்தப்பட்ட மக்களை வெளியே கொண்டு வந்திருக்கிறோம். ஆனாலும் கூட இந்த மக்களுக்கான போராட்டக்களம் என்று வருகிறபொழுது தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமே தலைமை தாங்குகிற பொழுது சாதியப் போராட்டமாக இருக்கிறது. ஆகையால் தமிழ்த் தேசிய எழுச்சியிலே ஆர்வமுள்ள என்னருமை தமிழ்த் தேசிய சிந்தனையாளர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுடைய அந்த ஞாயமான போராட்டத்திற்கு சாதிரீதியான அடக்குமுறைக்கெதிரான போராட்டத்திற்கு நீங்கள் தலைமை தாங்குங்கள், நாங்கள் உங்கள் பின்னால் வருகிறோம்.

அதன் மூலமாக தமிழகத்திலே ஒரு மிகப்பெரிய தமிழ்த் தேசிய எழுச்சியை கட்டமைக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு தயவு செய்து இங்கே தமிழ்த் தேசியம் எழுச்சி பெறவேண்டுமானால் பார்ப்பனீயம் வீழ்த்தப்படவேண்டும். தமிழ்த் தேசியம் எழுச்சி பெறவேண்டுமானால் திராவிடக் கட்சிகளைத் தோலுரித்தாகவேண்டும். அதே போன்று தமிழ்த் தேசியம் எழுச்சி பெற வேண்டுமானால் ஆதிக்கச்சாதி வெறி இயக்கங்களாக இருக்கக்கூடிய சாதிவெறி இயக்கங்களை அடையாளப்படுத்தி அம்பலப்படுத்தியாக வேண்டும்.

**பூ. சந்திரபோசு,**
**அமைப்பாளர்,**
**தியாகி இம்மானுவேல் பேரவை**
**எழுச்சி அரங்க உரையிலிருந்து.**



படிப்பகம்

www.padippakam.com

# சாதி ஒழிப்புப் போராட்டம், தமிழ்த் தேசியப் போராட்டமே!

தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தைப் பொறுத்தவரை சாதி ஒழிப்புப் போராட்டம் வேறு, தமிழ்த் தேசியப் போராட்டம் வேறு என்று கருதவில்லை. அதற்காக, தமிழ்த் தேசியம் என்று பேசினாலே போதும் அதற்குள்ளே சாதி ஒழிப்பு அடக்கம்தானே என்று இடக்குப் பேசக்கூடாது.

பார்ப்பனியத்தின் அடிப்படை சாதியம், அதன் தேசிய ஒடுக்குமுறை வடிவம்தான் இந்தியம். ஆக சாதி ஒழிப்புப் போராட்டம் ஒருவகையில் பார்ப்பனிய - இந்திய எதிர்ப்புப் போராட்டமே. நிறையபேர் என்ன நினைத்துக் கொள்கிறார்களென்றால், தமிழ்த் தேசியப் போராட்டம் என்றால் அதுவேறு. சாதி ஒழிப்புப் போராட்டம் என்றால் அதுவேறு என்று நினைத்துக்கொள்கிறார்கள்.

உண்மையிலேயே தமிழ்த் தேசிய விடுதலையின் அடிப்படை அச்சாணி என்பது சாதி ஒழிப்புப் போராட்டமே! சாதியாய்ப் பிரிந்து கிடக்கிற இந்த மக்கள் தமிழ்த் தேசிய இனம் என்கிற அந்த ஓர்மையை, பண்பாட்டு ஓர்மையைப் பெறவேண்டுமானால் அதற்கு அடிப்படை சாதி ஒழிப்புப் போராட்டமே என்றால், தமிழ்த் தேசியப் போராட்டத்தில் பிரிக்கமுடியாத அடிப்படை அங்கம் சாதி ஒழிப்புப் போராட்டம்.

தாழ்த்தப்பட்ட மக்கள் இதுவரை நடத்திவந்த ஆதிக்கச் சாதிவெறி எதிர்ப்புப் போராட்டங்களெல்லாம், ஏதோ, தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்கள், அல்லது மனித உரிமைப் போராட்டங்கள் என்று கொச்சைப்படுத்தப் படுவதாகவே த.ஒ.வி. இயக்கத்தைப் பொறுத்தவரை கருதுகிறோம். இதுவரை நடந்த தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சிகள் அனைத்தும் தமிழ்த் தேசியத்தின் ஓர்மைக்கான போராட்டம்! மேலவளவிலே முருகேசன் வெட்டிக் கொல்லப்பட்டார், தனக்கும் தேர்தலிலே நிற்கிற உரிமை வேண்டும் என்பதற்காக என்றால், அது தமிழ்த் தேசிய ஓர்மைக்கான போராட்டம். அது சாதியடிப்படையில் இருக்கிற இந்தச் சமூகத்தில் சாதி அடிப்படையிலே வெளிப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களுடைய போராட்டத்தை ஏதோ சாதி ஒழிப்புப் போராட்டம், தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் என்று கொச்சைப்படுத்திப் புரிந்துகொள்கிற இயக்கமல்ல த.ஒ.வி. இயக்கம். அது மிகத் தெளிவாகச் சொல்கிறது, இந்த மாநாட்டின் முதல் தீர்மானத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்த் தேசியப் போராட்டம் என்பது சாதி ஒழிப்பைப் பிரித்த தமிழ்த் தேசியப் போராட்டம் என்பது எந்த வகையிலும் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகவே "கோவை செழியன்" போன்றோரின் தமிழ்த்தேசியம் வடிவத்திலே தமிழ்த் தேசியம் போலத் தோற்றமளித்தாலும், உள்ளடக்கத்திலே, அது அடிப்படையிலே, ஆதிக்கச் சாதி வெறியை அடிப்படையாகக் கொண்ட, சாதியமைப்பை அடிப்படையாகக் கொண்ட தமிழ்த் தேசியத்திற்கு எதிரான, பார்ப்பனியக் கட்டமைப்பை அங்கீகரிப்பதற்கான ஒரு ஆதிக்க நடைமுறையே தவிர, அது எவ்வகையிலும் தமிழ்த் தேசியமில்லை. ஒருவர் தமிழன் என்று பேசுவதால், தமிழ்மொழிக்கு உரிமை வேண்டும் என்று பேசுவதால் அவர்களெல்லாம் தமிழ்த்தேசியப் போராளிகள் என்று கருதுகிற ஒரு பைத்தியக்கார நிலையிலே நாங்கள் என்றைக்கும் இருந்ததில்லை.

குறிப்பாக, தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் சில தமிழ்த்தேசியம் என்றால் கோவை செழியன் போன்ற ஆதிக்கச்சாதி வெறியர்களை உணர்ந்து கொள்வதும், சாதி ஒழிப்பு, தாழ்த்தப்பட்டோர் விடுதலை என்றால் தாழ்த்தப்பட்டோர் இயக்கங்களை உணர்ந்து கொள்வதுமான போக்கை மாற்றி, தாழ்த்தப்பட்டோரே தமிழ்த் தேசியத்தின் முகாமையான அரசியல் ஆற்றல், தாழ்த்தப்பட்டோரின் சாதி ஒழிப்புப் போராட்டம் அடிப்படையில் பண்பளவில் அதுவும் ஒரு தமிழ்த் தேசியப் போராட்டமே என்கிற நிலையை எடுக்கவேண்டும் என்று கோருகிறோம்.

**இளங்கோவன்,**
**ஒருங்கிணைப்பாளர், த.ஒ.வி.இ.**
**எழுச்சி அரங்க உரையிலிருந்து.**

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியா, பாக்கிசுதான், அமெரிக்கா... எனும் நம் எதிரிகளை நோக்கி...

'தேசப்பற்று என்றால் என்ன?' — என்றான் மாணவன் ஒருவன். அதற்கு, அந்த 'அகில பாரதிய வித்யார்த்தி பரிசத் இயக்க விடலை சொன்னது என்ன தெரியுமா?

'கிரிக்கெட் பார்க்கிறபோது — இந்தியா வெற்றிபெற வேண்டும் என்று எண்ணுவது தேசப்பற்று, இந்தியா தோல்வியடைந்து பாக்கிசுதான் வெற்றியடையவேண்டும் என எண்ணுவது — தேசவிரோதத்தனம்.
எப்படி இருக்கிறது.

தேசப்பற்று என்பதற்கான விளக்கம் ஏதோ கிரிக்கெட்டோடு நின்றுவிடவில்லை.

இன்றைக்குத் திடுமென பெரியபுயல்வந்து ஏராளமாய் அழிவை ஏற்படுத்தினாலும் அதற்குக் காரணம் யார் தெரியுமா? 'பாக்கிசுதான்' என்றுதான் சொல்லவேண்டும். — இதைத்தான் இன்றைக்கு இந்தியா நமக்குச் சொல்லிக்கொடுக்கிறது.

ஏதோ ஒரு இந்துக்கோயிலின் கல் உடைந்து சிதைந்துவிட்டால் அதில் பாக்கிசுதானின் உளவுச்சதி உள்ளதாகப் பறைசாற்றுகிறது இந்தியா. ஆனால் இலட்சக்கணக்கான மக்களை காசுக்கு அழைத்துச் சென்று பாபர் மசூதியை இடித்துத் தள்ளுவதும், கிறித்துவ தேவலாயங்களை எரித்துக் கொளுத்துவதும், கிறித்துவப் பெண் ஊழியர்களைக் கற்பழிப்பதும், பாதிரியார்களை உயிரோடு கொளுத்துவதும் இந்திய தேசப்பற்றாம் . . .

இன்றைக்கு எதையும் காட்டிலும் இந்தியப்பற்றை வளர்ப்பதற்கு இந்தியாவுக்கு கிடைத்த மிகப்பெரும் ஆயுதம் பாக்கிசுதான்.

பிள்ளையாரைக் காட்டி அதற்கு ஊர் ஊராய்ச் சிலைவைத்து, உள்ளூர்க்காலிப் பயல்களைக் கூலிக்கு வாங்கிக் கொட்டமடிப்பதுதான் இந்தியப்பண்பாடு.

அந்த இந்தியப் பண்பாட்டுக்குப் பிள்ளையார் செய்த உதவிபோல, கிரிக்கெட் இன்னொரு வகையில் இந்தியா என்கிற பூணூல் சிந்தனையை வலுப்படுத்துகிறது.

ஆனால் பிள்ளையாரும், கிரிக்கெட்டும் செய்கிற உதவிகளைவிட, இன்றைக்குப் பாக்கிசுதானே இந்தியக் கட்டமைப்பு அரசியலுக்கு நிறைய உதவுகிறது. பாக்கிசுதானைப்பூச்சாண்டி காட்டிக்காட்டி இந்தியா நம் முதுகுகளில் ஏறிச் சவாரி செய்கிறது.

உள்ளபடியே இந்தியா சொல்லுவதுபோல் பாக்கிசுதான் தான் அனைத்துக்கும் காரணமா? — என்றால் இல்லை.

காசுமீரை இந்தியாவும், பாக்கிசுதானும் பாதிப்பாதி பிடுங்கிக்கொண்டு எல்லைக்கோடு வகுத்துக்கொண்டு நாடு பிடி சண்டைப் போட்டுக்கொள்கின்றனர். இதனால் பாதிக்கப்பட்ட காஷ்மீர் மக்கள் எழுச்சியுடன் விடுதலைக்காக போராடினர்.

அதை ஒடுக்கி, சில ஒப்பந்தங்களைப் போட்ட இந்திய வெறி அரசு — அந்த ஒப்பந்தங்களை நடைமுறைப் படுத்தவே இல்லை.

எனவே, காசுமீர் சிக்கல் எரிந்துகொண்டிருக்கிற சிக்கலாகவே இருக்கிறது.

அதைத் தீர்க்க வக்கில்லாத பார்ப்பனிய ஆதிக்க வெறிபிடித்த இந்தியக் கட்டமைப்பு

www.padippakam.com

அரசு பாக்கிசுதானைக் குறைகூறி காசுமீரை ஆளுமை செய்ய எண்ணுகிறது.

இந்தியாவிற்குள் அடிமைப்பட்டுக் கிடக்கிற தேசிய இனங்கள் தங்கள் விடுதலைக்குப் போராடுகிறபோது, அதற்கும் பாக்கிசுதான் தான் காரணம் என்று பொய்புளுகுகிறது இந்திய அரசு. கெட்டிக்காரன் புளுகு எத்தனை நாளைக்குச் செல்லுபடியாகிவிடும்.

உள்ளபடியே இந்தியாவில் இருக்கிற அசாம், நாகலாந்து, மிசோரம், பஞ்சாப், காசுமீர், தமிழ்நாடு ஆகியவற்றின் விடுதலைப் போராட்டங்கள் இன்று நேற்று தொடங்கியது அல்ல.

ஏறத்தாழ ஐம்பதாண்டுகளுக்கு மேலாக விடுதலை இயக்கங்கள் கட்டி நடந்துவந்து கொண்டிருக்கிற போராட்டங்கள் அவை.

அவற்றின் உரிமைக்கான போராட்டம் முற்றிலும் உரிமையுள்ள அதன்அதன் தேசிய மக்கள் குடியரசை அமைப்பதற்கானப் போராட்டமே ஆகும்.

ஆனால் அப்போராட்டங்களின் நியாயங்களை எதிர்கொள்ள இயலாத இந்தியப் பார்ப்பனிய அரசு – அவற்றைப் பாக்கிசுதானியப் பின்புலம் உள்ளதாக சொல்லி மறைக்கிறது.

ஆனால் நம்மைப் பொறுத்த அளவில் பாக்கிசுதான் அரசும் தேசிய இன எழுச்சிகளை, அதன் உரிமைப் போராட்டங்களை ஒடுக்குகின்ற அரசுதான்.

அது கிழக்குப் பாக்கிசுதான் என்று வங்காள தேசத்தை ஒடுக்கியதுபோல், காசுமீரின் ஒரு பகுதியையும் ஒடுக்கிக்கொண்டுள்ளது.

இந்தியப் பார்ப்பனிய அரசு இந்துப் பார்ப்பனிய வெறி அரசுபோல் – பாக்கிசுதான் இசுலாமிய வெறி அரசே. எனவே இந்த இரண்டு அரசுகளும் – அங்கு வாழ்கிற மக்களுக்கானவை அல்ல. எனவே, பாக்கிசுதானும் நாம் எதிர்க்க வேண்டிய கூறுகளைக் கொண்ட அரசே அல்லாமல், இந்தியப் பாப்பனிய அரசு சொல்லுகிறபடியான வகையில் பாக்கிசுதான் தான் நமக்கு எதிரி என்று ஆகமுடியாது.

இந்தியப் பார்ப்பனியக் கட்டமைப்பின் அரசே நமக்கு முதன்மை எதிரி. அதுபோன்றதான ஒடுக்குமுறைகளும் செய்வதே பாக்கிசுதானிய அரசு என்கிற வகையில் கருத்தளவில் அதுவும் எதிரிதான். ஆனால் அந்நாட்டோடு நம்மைப் பொறுத்து ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என்பதால் அதை எதிர்த்த போராட்டங்கள் தேவையற்றதும், காற்றில் அம்பெய்துகிற முயற்சியுமே ஆகும்.

எனவே,

அமெரிக்காவும், அது போன்ற வல்லரசுகளும் நம் தேசங்களை ஒட்டச் சுரண்டிக் கொடுப்பதும், அதற்கு இந்திய வெறி அரசு துணையிருப்பதுமே நமக்கு முதன்மை எதிரிகளாக இருக்கமுடியும்.

எனவே, இந்தியக் கட்டமைப்பும், வல்லரசுகளும், எதைச் சொன்னாலும், எதை நிறைவேற்றினாலும், அவை நம் தேச உரிமைகளை ஒடுக்கவும், நம்மை மேலும் அடிமைப்படுத்தவுமான சொற்களே, செயல்களே என்று அறிவோம் . . .

**நூழில் பதிப்பகம்**

**முகவரி மாற்றப்பட்டுள்ளது**

**நூழில் பதிப்பகம்**

**33, லசு சர்ச்சு சாலை,**
**சென்னை – 600 004**
**☎ 4671193**

www.padippakam.com

## படிப்பதும் எழுதுவதும் பொழுதுபோக்கல்ல . . . வாழ்க்கை.

வாழ்க்கை, போராட்டம் நிறைந்தது. இடைவிடாத போராட்டத்தின் வெற்றியிலேயே வாழ்க்கை இனிமையுடைய தாகிறது. இவ்வினிய வாழ்க்கையை அணியப்படுத்துகிற முயற்சியின் ஒரு பகுதியே எழுத்து. ஏன் . . . பெரும்பகுதி என்று கூடச்சொல்லலாம். அறிவை விரிவு செய்து வாழ்க்கையை அர்த்தப்படுத்தும் பெரும் பணியை எழுத்து செய்கிறது. இதிலிருந்து இவ்வெழுத்தை ஆளுபவனான எழுத்தாளனின் கடமை என்ன என்பதை எளிதில் உணர முடியும். எனவே தான் துப்பாக்கி முனையில் பிறக்கும் அதிகாரங்களையெல்லாம் பேனா முனை எளிதில்வெற்றி கண்டிருக்கிறது. இவ்வலிமையை உணர்ந்த காரணத்தால் தான் ஆட்சியாளர்கள் எந்திரத் துப்பாக்கிகளுக்குப் பயப்படுவதையும் விட எழுதும் பேனாக்களுக்குப் பயப்படுகின்றனர்.

இந்த வகையில் எழுத்தாளனுக்கு இரண்டு கடமைகள் உள்ளன. ஒன்று தன்னைச் சமூகமயப்படுத்திக் கொள்வது. மற்றொன்று சமூகத்தை முன்னிலைப் படுத்துவது. இவ்விரு கடமைகளையும் இடைவிடாத பணியாகக் கொள்ளவேண்டியது எழுத்தாளனின் கடமை. இவைகளிலிருந்து விலகுகிற எழுத்தாளனால் இச்சமூகம் எவ்வளவு பாதிப்படையும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. எனவே எழுத்தாளன் எந்நேரமும் இச்சமூகத்தை தன் முன்னிருத்திக் கொண்டு சிந்திக்கவும் எழுதவும் வேண்டும்.

ஆனால், இன்றையச் சூழலில் எழுத்தாளன் தன்னை முன்னிலைப் படுத்திக் கொள்ளவும் சமூகத்தை தன்வயப்படுத்திக் கொள்வது மான சூழ்நிலைகளிலேயே உள்ளனர். இவர்களில் சிலரை விதிவிலக்காகக் கொள்ள வாய்ப்பிருக்கிறது என்கிற வாதம் கூட சில சமயம் எடுபடாமல் போகிறது.



அண்மைக்காலத்திய சில உதாரணங்களே இப்படியான சிந்தனைக்கு இட்டுச் செல்கின்றன.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு திருப்பூரில் தன்னார்வ அமைப்பு ஒன்று தமிழக அளவிலுள்ள முன்னணி எழுத்தாளர்களைக் கட்டி பட்டறை நடத்தியது. அப்பட்டறையின் முக்கிய நோக்கம் குழந்தைத் தொழிலாளர்கள் பற்றியது. இந்தியாவில் குறிப்பாக, தமிழக குழந்தைத் தொழிலாளர்களின் இழிவை எண்ணி வருந்தி அவர்களின் பிரச்சினைகளை பன்முகத் தன்மையுடன் படைப்பாக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. அதில் கலந்து கொண்ட மிகப்பெரும் எழுத்தாளர் எல்லாம் இந்நிறுவனத்தாரின் வழிகாட்டலின்படி ஆசிரியரின் கட்டளைக்கிணங்கிய மாணவன் கட்டுரை எழுதுவதைப் போல் எழுதத் துவங்கினார்கள். அவர்கள் எழுதத் துவங்கிய சில ஆண்டுகளிலேயே, உலக வர்த்தக அமைப்பு குழந்தைகளுக்கு எதிராக எழுப்பிய குரலை இந்தியா வன்மையாகக் கண்டித்து வெளியேறியது. இப்போது இந்திய அரசியலார் கேட்டுக்கொண்டால் இவ்வெழுத்தாளர்கள் ஒருவேளை குழந்தைத் தொழிலாளர்களின் தேவையை நியாயப்படுத்தி அவர்கள் சங்கமைத்துப் போராடவேண்டும் என்று கூட எழுதுவார்களோ என்னவோ. . .?

அதைப் போலவே சமீபத்தில் சென்னையில் மரண தண்டனைக்கு (ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நால்வருக்காக மட்டும் இல்லை என்று நம்புவோம்) எதிராக தமிழக அளவிலான மிகப் பெரும் எழுத்தாளர்கள் ஒன்று கூடி (இல்லை . . கட்டப்பட்டு) மரண தண்டனைக்கு எதிராக தங்கள் குரலை உயர்த்தியதோடல்லாமல் பேனாவையும்

படிப்பகம்

www.padippakam.com

உயர்த்துவதாக உறுதி கொண்டுள்ளனர்.

இங்கு நாம் சிந்திக்க வேண்டியது எழுத்தாளனின் கடமை பற்றியது. சுமார் இரண்டு ஆண்டுகளாக மரண தண்டனை ஒழிப்பு பற்றி சில அமைப்புகள் இயக்கம் நடத்தி வருகின்றன. அப்போதெல்லாம் இதில் கலந்துகொண்ட பெரும்பாலோர் கவனம் செலுத்தி தங்களின் பேனாவை உயர்த்தியதாகத் தெரிய வில்லை. மாறாக அனை வரையும் ஒன்றுகூட்டி பிரச்சினையின் தன்மை பற்றி விளக்கிய பின்னரே விழித்துக் கொண்டனர்.

நாட்டில் பல பிரச்சினைகள் எழுந்து மக்களை உலுக்கிக் கொண்டிருக்கின்றன. வழி தெரியாது மக்கள் திசை தடுமாறியுள்ளனர். இவர்களைத் திசைவழிப்படுத்த வேண்டிய கடமை எழுத்தாளனுக்கில்லையா?

எழுத்தாளன் எப்போதும் விழித்துக் கொண்டிருப்பான். உறக்கத்திலிருந்து எழுபவனல்ல. இம்மக்களைப் பாதிக்கிற ஒவ்வொன்றின் மீதும் தன் கவனத்தையும் கருத்தையும் செலுத்துபவன். அவ்வாறில்லாத எழுத்தாளன் எப்படி தன்னைச் சமூகத்தின் முன்னோடி என்று கூறிக்கொள்ள முடியும். கட்டளையின் மூலம் பிறப்பதல்ல எழுத்து! கைப்புண்ணுக்கு கண்ணாடி தேடுபவர்களாக எழுத்தாளர்கள் இருக்க முடியாது. சமூகத்தின் முனுமுனுப்பை சந்தியில் நின்று கத்துபவன்தான் எழுத்தாளன். எழுத்தாளன் இயங்குபவன்... இயக்கப்படுவனல்ல.

தமிழகத்தில் சமீப காலத்தில் பற்றி எரிகிற சாதியப் பிரச்சனைக்கு இவர்கள் ஏன் ஒன்று கூடக்கூடாது? இசுலாமிரையும், கிருஸ்தவரையும் தங்கள் எதிரிகளாகப் பாவிக்கும் இந்துப் பெருமதவாதத்துக்கு எதிராக ஏன் இவர்கள் ஒன்று கூடக்கூடாது? தமிழ்மொழியை ஆட்சிமொழியாக்க தமிழாசிரியர்கள் தான் போராடவேண்டும் என்கிற மனோநிலையில் உறைந்து கிடக்கிற எழுத்தாளர்கள் மொழிக்காக ஏன் ஒன்று கூடக்கூடாது? ஏகாதிபத்தியம் நுகர்வைத் திணித்து நுகத்தடி பூட்டுகிறதே இப்புதிய விலங்கை அறுக்க ஏன் ஒன்று கூடக்கூடாது?

இறுதியாக எழுத்தாளனுக்கு நம்பிக்கை வேண்டும்.
நம்பிக்கையூட்டுபவன் எழுத்தாளன்.
இவ்வகையில் எழுத்தாளர்கள் ஒன்று கூடுவார்கள் என்று நம்புவோம்.

**உஞ்சைராசன்**

## 'குயிலி' என்றொரு மனித வெடிகுண்டு!

1780-இல் வேலுநாச்சியார் தலைமையிலான விடுதலைப்படை, சிவகங்கையை வெள்ளையர்களிடமிருந்து கைப்பற்றப் போர் தொடங்கியது.

அப்போரின்போது விசயதசமி நவராத்திரியை முன்னிட்டு சிவகங்கை அரண்மனையில் உள்ள ராசேசுவரியை வணங்க, முன்வாயில் வெள்ளையரால் திறக்கப்பட்டது.

நடை திறக்கப்பட்டதும் வேலுநாச்சியாரும் அவரது பெண்கள் படையும் மாறுவேடத்தில் பொதுமக்களோடு கலந்து அரண்மனைக்குள் புகுந்தனர். திட்டமிட்டபடி தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த குயிலி என்ற பெண், தன் உடலெல்லாம் நெய்யூற்றித் தீ வைத்தபடி வெள்ளையரின் ஆயுதக்கிடங்கில் குதித்தாள். குயிலியோடு வெள்ளையரின் அனைத்து ஆயுதங்களும் எரிந்து முடிந்தன. வெள்ளையர் விழி பிதுங்கித் தோற்றோடினர்.

*(கே. ஜீவபாரதியின் வெள்ளையரை வெற்றிகண்ட வீரத்தாய் கட்டுரையிலிருந்து)*

படிப்பகம்

www.padippakam.com

அன்புத் தோழனுக்கு...

அண்மையில் சென்னைக் காவல் துறை ஆணையர் காளிமுத்து விடுத்திருந்த அறிக்கையைப் பார்த்திருப்பாய் என எண்ணுகிறேன்.

பொங்கலுக்கு முந்தைய போகித் திருநாளன்று அழுக்கு மூட்டைகள், தேவையற்ற பொருட்கள் இவற்றில் பலவற்றைக் கொளுத்தத் தடை விதித்திருப்பதாக அறிக்கை விட்டிருந்தார்.

காற்றைத் தூய்மைக் கேடாக்குகிறது என்றும், கரும்புகை உமிழ்கிறது என்றும் அதனால் அதைத் தடை செய்கிறோம் என்றுமாக அந்த அறிக்கை இருந்ததை நீயும் பார்த்திருப்பாய் என எண்ணுகிறேன்.

அது ஒரு வகையில் நல்ல முயற்சிதான் இல்லையா. இல்லையெனில் சாலைகளிலே வீட்டு மூலைகளிலேயே வண்டிகளின் பழைய சக்கர உருளைகளைப் -டயர்களைப்- போட்டுக் கொளுத்திக் கொண்டிருக்கவே செய்வர் நம் சிறுவர்கள்.

இவையெல்லாம் காற்று மண்டலத்தை மாசுபடுத்தும் என்பதில் உண்மையிருப்பது போலவே அவ்வகையில் மாசுபடுத்துகிற பல போக்குகளைத் தடை செய்ய இந்த அரசு முனைகிறதா? என்றால் இல்லையே.

தீபாவளி - அன்று நகர் முழுக்கக் கொளுத்துகிற பட்டாசுகளால் ஒத்த அளவு மாசுக்கேடடைகிறது. வளி மண்டலமே புகை மண்டலமாக அல்லவா மாறிப்போகும். ஆனால் இதை மாசுகெட்டுப் போகிறது என்று தடை செய்ய இந்தக் காளிமுத்துகளுக்குக் காலில் வலுவில்லை போலுள்ளது.

ஊருக்கு இளைத்தவன் எவனோ அவனைப் பிடித்து நசுக்கிற இவர்கள் வலுத்தவனிடம் வாயடங்க வால் குழைத்துக் கொண்டல்லவா இருக்கிறார்கள்.

தீபாவளி வெடிகளால் மாசு கெட்டுப் போகிறது என்று இந்தக் காவல் துறை நடவடிக்கை எடுக்கட்டுமே. அதற்கு வக்கற்றல்ல போகிறது.

அது மட்டுமில்லை தோழனே, ஸ்டெர்லைட் தொழிலகம், கூடங்குளம் அணுமின் நிலையம், கல்பாக்கம் அணுமின் நிலையம் இவற்றால் எல்லாம் மாசு எந்த அளவு கெடுகிறது.

இவற்றில் தீக் காற்றினால் அணுவீச்சினால் எத்தனை உயிர்கள் இறந்து போயிருக்கின்றன. எத்தனை பேர் இன்னும் சாகப் போகிறார்கள். ஆனால் இது பற்றியெல்லாம் இந்தக் காவல் துறை அதிகாரிகளுக்கு சிறிதும் அக்கறை இருந்ததில்லையே.

மாசுக் கட்டுப்பாடு காரணம் சொல்லித் தடை செய்ய வேண்டுமென ஏராளமான மக்கள் போராடுகிறபோது அவர்களின் மீது தடியடி நடத்தவும், துப்பாக்கிச் சூடு நடத்தவும் மட்டும் தான் இந்த வெறிபிடித்த காவல் துறைக்குத் தெரிந்திருக்கிறது.

அந்தத் தொழில் முதலாளிகளிடம், நிர்வாகிகளிடம் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு நத்திப் பிழைக்கிற தாங்கள் தானே அவர்களுக்கு ஆதரவாய் அவர்களிடம் கிடக்கின்றனர்.

உண்மையில் அவர்களுக்கு மாசு கெட்டுப்போவதில் அக்கறைதான் இம்மியளவேனும் உண்டா?

அதில் அக்கறை இவர்களிடம் இருக்குமானால் இத்தகைய போலிமை இவர்களிடம் எதற்காக?

உணர்ந்து கொள்ள வேண்டாமா?

தோழனே... இவைகுறித்தெல்லாம் நாம் விரிவாய் நம் தோழர்களிடம் பேசியாதல் வேண்டுமில்லையா.....

தோழமையுடன்,

**வேட்பன்.**

படிப்பகம்

www.padippakam.com

# சாதிகள் இல்லையடி பாப்பா!

கடந்த 23.07.99ல் நெல்லையில் மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கையை வலியுறுத்தியும் திருச்சி சிறையிலடைக்கப்பட்ட மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்களை விடுதலை செய்யக்கோரியும் நடைபெற்ற பேரணியில் போலீசால் நடத்தப்பட்ட தடியடி, துப்பாக்கிசூடு போன்ற கொடுமைகளால் உயிரிழந்த பதினோரு பேரையும் பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் மருத்துவக்குழு பரிசோதித்து அனைவரும் ஆற்றில் மூழ்கியே இறந்தனர் என்று அறிக்கை கொடுத்ததை மறுத்து, நீயாயம் கிடைக்கும் வரை நாங்கள் கொலையுண்ட உடல்களை வாங்கமாட்டோம் எனவும் உறுதியாக இருந்தனர். மேலும் புதிய தமிழகம் தலைவர் மருத்துவர். கிருஷ்ணசாமி அவர்கள் பதினேழு பேரின் உடலையும் ஒரே இடத்தில் புதைத்து அதில் நினைவிடம் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் உறவினர்கள் ஏற்றுக்கொண்டு கொலையுண்ட உடல்களை வாங்க மறுத்துவந்தனர்.

இதனால் அவ்வுடல்கள் மூன்று, நான்கு நாட்களாக அதே நிலையில் அழுகிக் கிடந்தது. இதன் பின்னர் சாதி ஒழிய சமத்துவபுரம் அமைக்கும் இந்த அரசு தகவலுக்காக கொல்லப்பட்டோரின் உறவினர்களுக்கு செய்தி கொடுத்துவிட்டு சாதி அடிப்படையில் ஒவ்வொரு பிணத்தையும் அவரவர் சாதிக்கான இடுகாட்டில் புதைத்தது (நெல்லையைச்சுற்றி) புதைத்த இடத்தில் மாதக்கணக்கில் ஆயுதம் தாங்கிய போலீசார் நிறுத்தி வைக்கப்பட்டனர்.

கொல்லப்பட்டோரின் உறவினர்கள் யாரும் புதைக்கப்பட்ட இடங்களுக்குச் செல்லக்கூட அனுமதிக்கப்படவில்லை.

வாழும்போது சாதியால் கொல்லப்படும் மக்களின் சினத்தைத் திசைமாற்ற சமத்துவபுர நாடகமாடுவோரின் இந்தச் செயல் சாதிகள் இல்லையடி பாப்பா என்று வரும் அரசின் பாடப்புத்தகத்தில் எச்சிலைத் துப்பச் சொல்லித்தருகிறது.

உழைக்கும் மக்கள் தமிழகம், 33, லசு சர்ச் சாலை, மயிலாப்பூர், சென்னை - 4

படிப்பகம்